GOKULAM

பிப்ரவரி 2008 ★ விலை ரூ.8/- ★ 80 பக்கங்கள்


கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



ஆண்டு மலர்
புது வரவுகள்
5

சாதனைச் !



ம்ம்ம்ம்!
அசல் காஃபி!
CANDYMAN
Cofitino
Rich Coffee Cream Toffee
CANDYMAN
Cofitino
வளமான காஃபி
க்ரீம் டாஃபி
Log on to
www.
.com
எதையும் செய்வான் CANDYMAN னுக்காக

கல்கி

கோகுலம்

பிப்ரவரி 2008 மலர் : 26 இதழ் : 1

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

ஆண்டு மலர் – புது வரவுகள்



18
கிராமியக் கலைகள்!









கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட்லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி

உதவி ஆசிரியர்:
ஆரணி யுவராஜ்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522 / 2225 0623
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : **25 யுஎஸ். டாலர்**

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!



மேலும்... மேலும்.

அன்புள்ள உங்களுக்கு

உங்களின் உள்ளம் கவர்ந்த கோகுலம் இருபத்தாறாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. உங்கள் அறிவுக்கும் கற்பனைக்கும் வித்திடும் புதிய பகுதிகள் அறிமுகமாகின்றன. நமது நாட்டின் பாரம்பரிய கலைகள், அது தோன்றிய வரலாறைச் சொல்லும் **'கிராமியக் கலைகள்'** பகுதியை கதை மூலம் சொல்கிறார் **அருண் சரண்யா**. ஏற்கனவே பல்வேறு மருத்துவச் செய்திகளைச் சொல்லி வந்த **டாக்டர் கு.கணேசன்** புதிய பாணியில் **'ஹலோ, டாக்டர் ஸ்பீக்கிங்'** மூலம் வியக்க வைக்கப் போகிறார்.

இந்தியா என்கிற பெரிய வீட்டில் பல்வேறு மொழி, கலாசாரம் கொண்ட மக்கள் கூட்டுக் குடும்பமாக வசித்து வருகிறோம். அந்த வீட்டின் ஒவ்வொரு அறைக்குள்ளும் (அதாவது மாநிலத்துக்குள்) **'இந்திய நாடு நம் வீடு'** பகுதி மூலமாக நம்மை அழைத்துச் சென்று அறிமுகம் செய்கிறார் **கௌதம்ராம்**. விந்தையான, உண்மையான தகவல்களைக் கொடுத்து **'அறிவோம் அதிசயம்'** என திகைக்க வைக்கிறார் **முனைவர் ஆசுரா**. இத்துடன் வாண்டுதாசன் எழுதும் மாயாஜாலத் தொடர் **'வீரா-சூரா'** இந்த இதழில் தொடங்குகிறது. வழக்கமான போட்டியுடன் **'பரிசுப் பெட்டிகள்'** என்ற புதுமையான போட்டியும் அறிமுகமாகிறது.

எல்லாவற்றையும் படித்துவிட்டு உங்கள் கருத்தை எழுதுங்கள். கோகுலத்தை மேலும் மேலும் அழகு செய்வோம்!

அன்புடன்
கோகு

கடித மாலை

✉ தி வாட்டர் ஹார்ஸ் திரைப் படத்துடைய முன்னோட்டத்தைக் கொடுத்து, எங்கள் தூக்கத்தைக் கெடுத்து விட்டீர்கள். அப்படம் எப்போது வரும் என ஆவலைத் தூண்டிவிட்டீர். அட்டைப்பட கவர் ஸ்டோரி அசத்தல்!

- எல்.கே.நர்கீஸ்,
த.முருங்கப்பட்டி



✉ ஜனவரி மாதத்தில் புத் தாண்டு, பொங்கல், குடியரசு தினம்தான் தெரியும். ஆனால், இளைஞர் தினம், தியாகிகள் தினமும் உள்ளன என்பதை கோகுலம் மூலம் அறிந் தோம்.

- ச.தேவேந்திரன்,
வெள்ளம்பி

புத்தாண்டுப் பரிசு!

✉ ஜனவரி மாத இதழ் கோகுலத்தில் உள்ள 'மினி கோகுலம்' எனக்குக் கிடைத்த புத்தாண்டுப் பரிசு. சிறிய டைரியில் என் பெற்றோர், நண்பர்களின் பிறந்த நாட்களை குறித்துக்கொண்டு அவர்களுக்குப் பரிசு தருவேன்.

- என்.எம்.ஆர்த்தி,
ஐந்தாம் வகுப்பு,
விட்டில் ரோஸ் கான்வென்ட்
நர்சரி பள்ளி, சென்னை

✉ சிரிப்பலை நாலே நாலு தான் என்றாலும் நாலுமே பெரிய அலைகள்தான்!

- ஆர்.பி.வளர்மதி,
செல்வமருதூர்

✉ கோகுலத்துக்கு பெரியவர்களாகிய நாங்கள் கதை எழுதலாமா?

- திருமதி. பிருந்தாவேணி,
சென்னை

(தாராளமாக எழுதலாம். அவை சிறுவர்களுக்கேற்ற படைப்பாக இருக்க வேண்டும். - ஆர்)

✉ டாக்டர் பக்கத்தில் 'தொல்லை தரும் தொலைக்காட்சி' பகுதியை படித்தேன். தொலைக்காட்சி பார்ப்பதை தவிர்த்தால் பல நோய்கள் நம்மை அண்டாது என்பது உறுதி!

- கே. சிந்துஜா,
சென்னை

அறிவிப்பு!

இந்த மாதம் இரண்டாவது அட்டையில் இடம்பெற வேண்டிய 'கோகுலம் சிறுவர் சங்கம் உறுப்பினர்' புகைப்படங்கள் 80ஆம் பக்கத்தில் உள்ளன.



பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு

யுவஸ்ரீ கலா பாரதி விருது

மதுரை பாரதி யுவ கேந்திரா சார்பில் இசை, படிப்பு, ஓவியம், சமூகப்பணி, பரதநாட்டியம், பேச்சு, கவிதை, விளையாட்டு ஆகிய துறைகளில் ஏதேனும் ஒரு துறையில் சிறந்து விளங்குகிற L.K.G முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியருக்கு **'யுவஸ்ரீ கலா பாரதி'** என்ற விருதினையும் கல்லூரி மாணவ மாணவியருக்கு **'சுவாமி விவேகானந்தர்'** விருதினையும் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட வாரியாக வழங்கி வருகிறோம். ஒவ்வொருவருக்கும் வெள்ளிக்கேடயம் மற்றும் விருதுக்கான பெரிய அளவிலான பட்டயமும், ஸ்படிக மாலையும் வழங்கப்படும்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள அனைத்து மாவட்டத்தைச் சார்ந்த பள்ளி மாணவ, மாணவியருக்கு இவ்விருது வழங்கும் நிகழ்ச்சி அந்தந்த மாவட்டத்தில் நடைபெற உள்ளது.

ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் அந்தந்த பள்ளியைச் சார்ந்த முதல்வர்கள் ஒவ்வொரு வகுப்பில் உள்ள அனைத்து பிரிவுகளில் இருந்தும் முதல் 5 ரேங்க் பெற்ற மாணவ மாணவியர் மற்றும் இசை, UC MAS, ABACUS ஓவியம், சமூகப்பணி, பரதநாட்டியம், பேச்சு, கவிதை, அனைத்து விளையாட்டு, பொது அறிவுத்திறன், யோகா ஆகிய துறைகளில் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் 15 பேர் கொண்ட பெயர் பட்டியலை அடியிற்கண்ட முகவரிக்கு ஒவ்வொருவருக்கும் வீட்டு முகவரி, தொலைபேசி எண்ணுடன் கூடிய ரூ.10 அஞ்சல் தலை ஒட்டப்பட்ட சுய விலாசமிட்ட கவருடன் 20 தினங்களுக்குள் அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தேர்வு செய்யப்பட்டவர்களின் விவரம் அவர்களது வீட்டு முகவரிக்கு அனுப்பப்படும். விருது வழங்கும் விழாவில் அவரவருக்கு எடுக்கப்படும் புகைப்படச் செலவை ஒவ்வொருவரும் கண்டிப்பாக ஏற்க வேண்டும். 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியரை இவ்விருதுக்கு அனுப்பி வைக்கும் பள்ளிக்கு சிறப்புக் கேடயம் வழங்கப்படும்.

நெல்லை பாலு, நிறுவனர்-பாரதி யுவ கேந்திரா, G-28, சாந்தி சதன் குடியிருப்பு, கோச்சடை, மதுரை-625 016.

செல் 94439-30815, 94426 30815.

யுவஸ்ரீ கலா பாரதி விருதுக்கு தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள அனைத்து மாவட்ட மாணவ, மாணவியர்கள் மற்றும் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 80% மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெற்றவர்களும் தாங்கள் பெற்ற பரிசுக்கான ஜெராக்ஸ் பிரதிகளுடன், ரூ 10 அஞ்சல் தலை ஒட்டப்பட்ட சுய விலாசமிட்ட கவருடன் இத்துடன் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து தனியாகவும் இவ்விருதுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள இசை, பரத நாட்டிய ஆசிரியைகள், ஓவியம், கராத்தே, யோகா மற்றும் UC MAS, ABACUS, HINDI மாஸ்டர்களும் தங்களிடம் பயிலும் சிறப்பானவர்களின் பெயர் பட்டியலையும் அனுப்பலாம்.

கவிதை தொகுப்பு நூல்

பாரதி யுவ கேந்திரா சார்பில் 200 கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து ஒரு கவிதைத் தொகுப்பு நூல் பிப்ரவரியில் வெளியிட உள்ளோம். இந்நூலுக்கு கவிஞர்கள் 24 வரிகளுக்குள் மரபு அல்லது புதுக்கவிதை ஒன்று எழுதி எமது மேற்கண்ட முகவரிக்கு அனுப்பலாம். அத்தோடு ரூபாய் 250/- M.O. மூலம் அனுப்பவும். ஒவ்வொருவருக்கும் 5 பக்கங்கள் ஒதுக்கப்படும்.



பாரதி யுவ கேந்திரா ட்ரஸ்ட்

(Regd.)

G28, சாந்தி சதன் குடியிருப்பு, கோச்சடை, மதுரை - 625 016.
Cell : 94439-30815, 94426-30815,

"யுவஸ்ரீ கலா பாரதி விருது - 2007"

பெயர் :

தந்தை பெயர் :

வகுப்பு :

தற்பொழுது பயிலும் :
பள்ளி - கல்லூரி பெயர்

வீட்டு முகவரி மற்றும் :
தொலைபேசி எண்

அதிகமாக பரிசு
பெற்ற போட்டி :
(ஏதேனும் ஒரு துறையைக்
குறிப்பிடவும்)

தங்களின்
சமீபத்திய
பாஸ்போர்ட்
அளவு
புகைப்படம்
இங்கு ஒட்டவும்

விருது பெறுபவர் கையொப்பம்

தேதி :

வாண்டுதாசன்

வீரா-



தங்கபுரி நாட்டை பொன்முகிலன் ஆண்டு வந்தார். மக்களின் மகிழ்ச்சி ஒன்றையே தமது குறிக்கோளாக நினைத்து, அதற்கேற்ப ஆட்சி புரிந்ததால் அந்த நாடு வளமுடன் இருந்தது.

அவரது மகன் தங்க முகிலன் குருகுலத்தில் படிக்கிறான்.

இளவரசனின் குரு 'வீரபத்ரன்'. எழுபது வயது. ஆனால், ஐம்பது வயதுக்காரர் போலவே இருப்பார். அரசர் பொன் முகிலனின் குரு

புது வரவு

தொடர்கதை

சூரா

1

முக்கியமான அரசாங்க முடிவுகளை எடுக்கும்போதும் புதிய திட்டங்களை நிறைவேற்றும்போதும் வீரபத்ரனிடம் கலந்தாலோசித்து, தீர்மானங்களை நிறைவேற்றுவார் அரசர். நாட்டு மக்களும் வீரபத்ரனிடம் மிகுந்த மரியாதை வைத்திருந்தார்கள்.

அன்று விடியற்காலை குருகுலத்தில்-

''எல்லோரும் வந்துவிட்டீர்களா?'' என்று கேட்டார் வீரபத்ரன்.

''ஒருவனைத் தவிர, எல்லோரும் வந்துவிட்டோம்'' என்றான் ஒருவன்.

''அந்த ஒருவன் கேசவன்தானே?'' என்று கேட்டார்.

''இல்லை...இல்லை... இதோ வந்துவிட்டேன்'' என்று குரல் கொடுத்தவாறே ஓடிவந்து நின்றான் கேசவன். உடம்பிலிருந்து தண்ணீர் சொட்டியது.

''குளித்துவிட்டு வர தாமதமாகிவிட்டது குருவே'' என்றான் கேசவன்.

''நாங்கள் எல்லாம் குளிக்காமலா வந்திருக்கிறோம்'' என்று ஒருவன் சொல்ல, மற்றவர்கள் சிரித்தார்கள்.

''நீங்கள் எல்லாம் காக்கைக் குளியல் போட்டீர்கள். நான் மனிதக் குளியல் போட்டேன்'' என்றான் கேசவன்.

''ஆமாம்! ஆமாம்! அதேபோல நாங்களெல்லாம் மனிதத் தூக்கம் போட்டோம். கேசவன் கும்பகர்ண தூக்கம் போட்டான்'' என்றான் தங்கமுகிலன்.

மீண்டும் சிரிப்பொலி எழுந்தது.

''பொய்! பொய்! நாட்டின் வருங்கால மன்னன் பொய் சொல்லலாமா?'' என்று கத்தினான் கேசவன்.

''போதும்! ஏற்கெனவே தாமதமாகிவிட்டது'' என்றார் வீரபத்ரன்.

அடுத்தநொடி அமைதி நிலவியது. வீரபத்ரன் பூஜையறையில் நுழைய மற்றவர்கள் அவரைத் தொடர்ந்தனர். குரு தனக்குரிய மனையில் அமர்ந்தார். மற்றவர்கள் வரிசையாக தரையில் அமர்ந்து கண்களை மூடினார்கள்.

வீரபத்ரன் சொன்ன ஸ்லோகத்தை திருப்பிச் சொன்னார்கள். பதினைந்து நிமிடங்கள் கரைந்ததும் அனைவரும் குரு கொடுத்த தீர்த்தத்தை பக்தியுடன் பெற்றுப் பருகினார்கள். பூஜையறையை விட்டு வெளியே வந்தார்கள்.

அடுத்த வேலைக்கு ஆயத்தமானார்கள். அடுத்து, இருவர் இருவராகப் புறப்படுவார்கள். பழங்களைக் கொண்டு வர, சுள்ளிகளைப் பொறுக்க, காய்களைக் கொண்டு வர, குருகுலத்தைச் சுத்தம் செய்ய இப்படி எல்லோருக்கும் வேலை உண்டு. யார் எதைச் செய்வதென முன்தினமே முடிவு செய்யப்படும்.

அந்த வகையில், இன்று தங்க முகிலனுக்கும் கேசவனுக்கும் பழங்களைக் கொண்டுவரும் வேலை. இருவரும் கூடைகளுடன் கிளம்பினர். கேசவன் மந்திரி மகேந்திரனின் மகன். முகிலனின் நெருங்கிய நண்பன்.

''முகிலா! நீ செய்தது நியாயமா?'' என்றான்.

''என்ன செய்துவிட்டேன்?''

''சந்தடி சாக்கில் கும்பகர்ணன் போல் தூங்குவதாகச் சொன்னாயே?''

''நான் சொல்லாவிட்டால் குருவுக்குத் தெரியாதென நினைத்தாயோ? உனது தூக்கத்தின் புகழ், குருகுலத்தைத் தாண்டி நாடுவரை பரவிவிட்டது.''



''எல்லாம் சதி! என்றோ ஒருநாள் அசந்து தூங்கினால், கும்பகர்ணன் பட்டம் கொடுப்பதா?''

''என்றோ ஒருநாளா...''

''சரி! வாரத்துக்கு ஒருநாள்''

''வருங்கால மந்திரி இப்படி இருக்கலாமா?''

''என்னை மந்திரி என்று சொல்லாதே. மந்திரி வேலை என் அப்பாவோடு போகட்டும். படைத் தளபதியாக வேண்டும். அதுதான் என் கனவு.''

''ஓஹோ! அந்தக் கனவைக் காண்பதற்கே நீண்ட நேரம் தூங்குகிறாயோ?''

''கிண்டலா? எழுதி வைத்துக்கொள். நீ தங்கபுரியின் மன்னனாகிறாயோ இல்லையோ, நான் தளபதியாவேன். அதற்கு கடவுளே வழி செய்துவிட்டார்.''

''எப்படி?'' என்றான் முகிலன்.

''இப்போதுள்ள தளபதிக்கு ஆண் வாரிசு கிடையாது. இரண்டும் பெண்கள். ஆகவே, வாரிசு பயமில்லை.''

''வாரிசு பயம் இல்லாவிட்டாலும் உனக்குப் போட்டியாக ஒருவன் இருக்கிறானே.''

''யார்? விதூஷகர் விமலனின் மகனா?''

''அவனேதான்! என்னிடம் கேட்டதைப் போல் அவனிடம் போய் விதூஷகனின் மகனா என்று கேட்டு விடாதே.''

''ஏன்?''

''அப்படிக் கேட்பதே அவனுக்குப் பிடிக்காது. 'விதூஷகன்' என்ற வார்த்தையையே வெறுக்கிறான். கேவலமாக நினைக்கிறான்.''

''அதிலென்ன கேவலம்? மற்றவர்களைச் சிரிக்க வைத்து அவர்களின் மனத்தையும் உடலையும் ஆரோக்கியமாக்கும் அற்புதப் பணி. வீரத்தை யார் வேண்டுமானாலும் பெறலாம். நகைச்சுவை உணர்வு அப்படியில்லையே. அது இறைவன் தரும் கொடை'' என்றான் கேசவன்.

''நமக்குப் புரிகிறது. மாணிக்கத்துக்குப் புரியவில்லையே. நேற்று ராமன் தெரியாமல் மாணிக்கத்தின் காலை மிதித்துவிட்டான். மன்னிப்பு கேட்டும் ராமனை முரட்டுத்தனமாக அறைந்துவிட்டான்'' என்றான் முகிலன்.

''ஆக, எனக்கு ஒரு போட்டியாளன் இருக்கிறான். அதுவும் நல்லதுதான் போட்டி இருந்தால்தானே லட்சியத்தில் வேகமும் இருக்கும்.''

இருவரும் பேசிக்கொண்டே அந்த இடத்தை அடைந்தனர். அங்கே நிறைய கனி மரங்கள் இருந்தன. தூரத்தில் அருவி கொட்டியது. இவர்களைப் பார்த்ததும் குரங்குக் கூட்டம் மரத்துக்கு மரம் தாவிச் சென்றன.

''பார்த்தாயா முகிலா! வருங்கால தளபதியைப் பார்த்ததும் குரங்குகள்கூட பயந்து சென்றுவிட்டன'' என்றான் கேசவன்.



''அப்படியில்லை கேசவா! நமது இனத்தைச் சேர்ந்தவன் வந்திருக்கிறான், எதற்கு வீணாகச் சண்டையிடுவானேன். பாவம், பழங்களைப்

பறித்துச் செல்லட்டும் என நினைத்துச் செல்கின்றன'' என்றான் முகிலன்.

அவனை முறைத்த கேசவன் ''கிண்டலா? நான் மரத்தில் ஏற மாட்டேன். நீயே ஏறி பறித்துப் போடு'' என்றான்.

சிரித்த முகிலன், கூடையை அவனிடம் கொடுத்துவிட்டு 'கிடுகிடு'வென மர உச்சிக்குச் சென்றான். ஒரு பெரிய கிளையில் தோதாக அமர்ந்துக்கொண்டான்.

''கேசவா, பழங்களைப் பறித்துப் போடுகிறேன். ஒரு பழம்கூட கீழே விழாமல் பிடி பார்ப்போம்.''

''பிடித்துவிட்டால்...''

''தளபதியாகும் தகுதி உனக்கு இருப்பதாக ஏற்றுக் கொள்கிறேன். ஒரு பழம் தவறினாலும் நீ என்னை முதுகில் சுமந்து குருகுலம் வரை செல்ல வேண்டும்.''



''எ...என்ன... குருகுலம் வரையிலா?''

''ஏன் பயமாக இருக்கிறதா? போட்டியிலிருந்து விலகுகிறாயா?''

''ம்ஹூும்! சவாலை ஏற்கிறேன். பழங்களை வீசு'' என்றபடி தயாரானான் கேசவன்.

முகிலன் ஒரு பழத்தை வேகமாக வீச, கேசவன் அதைத் தாவிப் பிடித்தான். அடுத்த பழத்தை சற்றுத் தொலைவில் வீச, பாய்ந்து பிடித்துத் தரையில் உருண்ட கேசவன், சட்டென எழுந்து நின்று ''எப்படி?'' என்றான்.

அப்போது முகிலனின் பார்வை தற்செயலாக அருவிப் பக்கம் சென்றது. அங்கே கண்ட காட்சி அவன் புருவங்களை உயர்த்தியது. சட்டெனக் குனிந்து ''கேசவா'' என்று மெதுவாகக் குரல் கொடுத்தான்.

''என்ன?'' என்றான் கேசவன்.

''உஷ்... சத்தம் போடாமல் மேலே வா. சீக்கிரம்! சீக்கிரம்'' என்றான் முகிலன்.

கேசவன் 'விறு விறு'வென மரத்தில் ஏறி முகிலனை நெருங்கி, ''என்ன முகிலா?'' என்று கேட்டான்.

''அங்கே பார்.''

முகிலன் விரல் சுட்டிய பக்கம், கேசவன் பார்வையைச் செலுத்தினான். அவனது முகமும் ஆச்சர்யத்தைச் சுமந்தது. அருவியை நோக்கி மாணிக்கம் சென்றுகொண்டிருந்தான்.

''மாணிக்கத்துக்கு இந்தப் பக்கம் என்ன வேலை?''

''இன்று அவனும் பாலனும் சுள்ளிகளை எடுக்க வேண்டும்'' என்றான் முகிலன்.

''அதற்கு இந்தப் பக்கம் வர வேண்டிய அவசியமேயில்லையே. அதுவும் தனியாக வந்துள்ளானே ஏன்?'' என்று குழம்பினான் கேசவன்.

''கண்டிப்பாக குளிப்பதற்கு வரவில்லை. அவன் நடையில் வேகம் இருந்தாலும் ஒருவிதமான தடுமாற்றமும் காணப்படுகிறது. அடிக்கடி தலையைத் திருப்பிப் பார்த்துக் கொள்கிறான், ஏதோ தவறான காரியம் செய்பவன் போல'' முகிலன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அடுத்த ஆச்சரியம் நடந்தது.

ஆச்சரியம் என்பதைவிட அதிர்ச்சி என்றே சொல்ல வேண்டும்.

அருவியை நோக்கிச் சென்று கொண்டிருந்த மாணிக்கம் ஒரு பாறையை நெருங்கினான். அடுத்த நொடியே ஆளைக் காணோம்.

ஆம்! மாயமாய் மறைந்துவிட்டான்.

(தொடரும்)

சாதனைச்

ராஜ்

"சாதாரண மாணவர்களையும் சாதனையாளர்களாக்குவதே எங்கள் பள்ளியின் நோக்கம்" என்கிறார் என்.கே.ஜவஹர். இவர்தான் காமராஜ் மேல்நிலைப் பள்ளியின் இணை தாளாளர்.

கோகுலம் நடத்தும் சுழல் கோப்பை திட்டத்தில் 2007ஆம் ஆண்டு வெற்றி பெற்ற பள்ளி நம்பி யூரிலுள்ள **காமராஜ் மேல்நிலைப் பள்ளி**. ஈரோடு மாவட்டம், கோபி செட் டிப்பாளையத்திலிருந்து இருபது நிமிட தொலைவிலுள்ளது நம்பியூர். பேருந் தில் பயணிக்கும்போது சாலையின் இரு பக்கங்களிலும் வாழை, கரும்பு, நெற் பயிர்கள் பூத்தூவி வரவேற்பதைப் போல 'சிலு சிலு' காற்றை வீசி வரவேற்கிறது.

பள்ளி அமைந்துள்ள இடமும் ரம்மி யமாக உள்ளது. நம்மை வரவேற்ற தாளாளர் கருப்பசாமியும், தலைமை ஆசிரியர் கணேஷ்குமாரும் அன்புடன் உபசரித்தார்கள்.

"எங்கள் பள்ளி மாணவர்கள் சுழல் கோப்பையை வென்றிருப்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. நாங்கள் வெறும் கல்விப் பாடம் மட்டும் நடத்து வதில்லை. இதுபோன்ற படைப்புத் திறமைகளுக்கும் முக்கியத்துவம் அளிக் கிறோம். அவர்களை ஊக்கப்படுத்தி மேலும் எழுத வைக்கிறோம்" என்றார் பரிசு வென்ற மாணவர்களின் வகுப்பா சிரியர் ஆனந்தஜோதி.



* பள்ளி தாளாளர், தலைமை ஆசிரியருடன் கோப்பையை வென்ற மாணவர்கள்...

'விஸ்வேஸ்வரா டெலிமீடியா' என்ற நிறுவனம் ஆண்டுதோறும் மாவட்ட ரீதி யாக சிறந்த பள்ளிகளைத் தேர்ந்



* ஆனந்தஜோதி



கவர் ஸ்டோரி

சிகரங்கள்!

தெடுத்து விருதுகளை வழங்குகிறது. 2007ஆம் ஆண்டு நடத்திய ஆய்வில் இந்தப் பள்ளி மாவட்டத்தின் சிறந்த பள்ளியாகத் தேர்வாகியுள்ளது. கடந்த ஜூலையில் பொதிகை தொலைக் காட்சியில் நிகழ்ச்சியும் ஒளிபரப்பாகி யுள்ளது.

''இங்கே படிக்கும் மாணவர்கள் எல்லோருமே சாதாரண நடுத்தர குடும் பத்தைச் சார்ந்தவர்கள். அவர்களுக்குத்



❋ காமராஜ் மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களுடன் மாணவர்கள்...

தரமான கல்வியை அளித்து நல்ல நிலைக்குக் கொண்டு வர எங்களால் இயன்றதை குறைந்த கட்டணத்தில் செய்கிறோம்'' என்கிறார் பள்ளியின் தாளாளர் கருப்பசாமி.

அவர் சொல்வதைப் போல் கோப்பையை வெல்ல காரணமான மாணவர்களில் ஒருவரான ஜனார்த்தனம் தந்தை சிறிய மாளிகை கடை வைத்திருக்கிறார். மற்றொரு மாணவர் பிரதீப்குமாரின் தந்தை திருப்பூர் பனியன் கம்பெனியில் தொழிலாளியாகப் பணிபுரிகிறார். சுரேஷ்குமாரின் தந்தை விவசாயி. மின்துறை ஊழியராக இருப்பவர் ஜெயக்குமாரின் தந்தை.

“எங்கள் வகுப்பாசிரியர் மிகவும் ஊக்கமூட்டுவார். அதனால்தான் என்னால் உற்சாகமாக ஓவியங்களை வரைய முடிகிறது'' என்கிறார் ஜனார்த்தனம். பத்தாம் வகுப்பு படிக்கும் இவரது ஓவியங்கள் கோகுலத்தில் நிறைய வந்துள்ளன. நாம் சென்றபோதும் ஓர் ஓவியம் வரைந்து கொடுத்தார். மற்ற மாணவர்களும் பல்வேறு படைப்புகளைக் கொடுத்து வெளியிடச் சொன்னார்கள். அவர்கள் ஆர்வம் நம்மையும் உற்சாகமூட்டியது.

“நாங்கள் வெறும் கல்விப் பாடம் மட்டும் நடத்துவதில்லை. இதுபோன்ற படைப்புத் திறமைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கிறோம்!”

பிரீகேஜி முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலுள்ள இந்தப் பள்ளியில் சிறிய விடுதியும் உள்ளது. தொலைவிலிருந்து வருகிற மாணவர்கள் இங்கே தங்கி படிக்கிறார்கள். பல்வேறு விளையாட்டு, இலக்கியப் போட்டிகளில் மாவட்ட அளவில் பரிசுகளையும் வென்றுள்ளனர்.

பள்ளியின் இணை தாளாளர் சொன்னதைப் போல் சாதனைச் சிகரங்களாக திகழும் மாணவர்களுக்கு வாழ்த்துகளைக் கூறி கோகுலம் சுழல் கோப்பையை வழங்கினோம். தவிர, நான்கு மாணவர்களுக்கும் கோகுலம் சார்பில் தனிப் பரிசும் வழங்கப்பட்டது. அவர்களிடமிருந்து விடைபெற்ற போது மகிழ்ச்சியுடன் கைகளைக் குலுக்கி தங்களது அன்பை வெளிப்படுத்தினர்.

அட்டையில் :
கோப்பையுடன்
நா.ஜனார்த்தனம்,
எம்.ஜெயக்குமார்,
சுரேஷ்குமார்,பிரதீப்குமார்
படங்கள்: **ஸ்ரீஹரி**

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில் தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி. முடிவு தேதி 11.2.2008



அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம்,
(பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

விடையைச் சொல்; பரிசை வெல் - 8

1. மாணிக்கத்தின் தந்தை யார்? ....
2. கரகாட்டத்தின் பிறப்பிடம் எது? ....
3. பாஸ்டர் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தொடங்கிய வருடம் ....
4. 'செனகல் கம் அக்கேசியா' மரத்திலிருந்து தயாரிக்கப்படும் மருந்தின் பெயர் ....
5. இந்தியாவின் சக்கரைக் கிண்ணம் எது? ....

என் பெயர் : ....


வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....


....

....




முன்னொரு காலத்தில் 'சுண்டு' என்ற குட்டி பல்லி இருந்தது. அது மிகவும் துடுக்குடன் அங்கும் இங்கும் சுற்றிக்கொண்டிருக்கும். அதன் அம்மா கவனமாகப் பார்த்துக்கொண்டாலும் எப்படியோ டிமிக்கி கொடுத்து வெளியே சென்றுவிடும்.

ஒருமுறை கதவருகே ஒளிந்து விளையாடும்போது கதவின் இடுக்கில் சுண்டுவின் வால் மாட்டி, துண்டாகி விட்டது. பாவம் சுண்டு, வலியால் துடித்தது. அம்மா மருந்து போட்டாள்.




படங்கள் : மகேஸ்




சில நாட்களுக்குப் பிறகு காயம் சரியாகிவிட்டது. ஆனால், வால் இல்லாமல் இருப்பதை நினைத்து வருத்தப்பட்டது. பூனை பூபாலனைச் சந்தித்தது.

“அண்ணே! உன்னோட வாலில் கொஞ்சம் தருகிறாயா?” என்று கேட்டது சுண்டு. “அதெல்லாம் முடியாது. வேற ஆளைப் பாரு” என்று கூறிச் சென்று விட்டது பூபாலன். பிறகு அணிலைச் சந்தித்தது.



பல்லி கேட்ட



“ராமா! உன் வாலில் கொஞ்சம் தருகிறாயா?” என்று கேட்டது. “என் இருப்பிடத்தைச் சுத்தம் செய்ய வாலைத்தான் பயன்படுத்துவேன். அதனால் தர முடியாது” என்று மறுத்தது அணில். அடுத்து மாடு மருதுவிடம் கேட்டது.


“என் மேல் அமரும் பறவை, பூச்சிகளை விரட்ட வால் முக்கியம். அதனால மன்னிச்சுடு. தரமுடியாத நிலை. நீ கடவுள்கிட்டேயே கேளேன். அவர் ரொம்ப அன்பானவர். உனக்கு புது வால் கொடுப்பார்” என்றது மருது.





சுண்டு, கடவுளை நினைத்து தவம் இருந்தது. எதுவும் சாப்பிடாமல், இரவு-பகல் பார்க்காமல் அது செய்த தவத்தைக் கண்டு மகிழ்ந்த கடவுள், அதன் முன்பு தோன்றினார். சுண்டு தனது வேண்டுகோளைச் சொன்னது.

“உனது விடாமுயற்சியைப் பாராட்டுகிறேன். இனி உங்கள் பல்லி இனத்துக்கு வால் துண்டானால் மீண்டும் முளைக்கும் வரம் தருகிறேன்” என்றார். அப்போது முதல், பல்லிகளுக்கு வால் துண்டானாலும் மீண்டும் முளைக்கிறது.



வரம்!

கதை : கோ.லோகேஷ்வரன்

உறுப்பினர் எண் : 291

சரஸ்வதி மெட்ரிக் பள்ளி, விழுப்புரம்.

சிரிப்பலை

சிரிப்புக்கு எதிர்பதம்!



''நம்ம வாத்தியார் ஒரு அறுவைன்னு அவர் வாயாலே சொல்லிட்டார்...''

''எப்படி?''

''அறம் செய்ய விரும்புன்னு சொல்றாரே...''

– க.பூங்கொடி, சித்தோடு



''ஊசி குத்தறப்போ வலி தெரியாம இருக்க ஒரு ஜோக் சொல்லட்டுமா?''

''ஐயோ! வேண்டாம் டாக்டர்! என்னாலே ஒரே சமயத்துல இரண்டு வலியையும் தாங்கிக்க முடியாது.''

–டி.தினேஷ்குமார், பதினொராம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, மேட்டுப்பாளையம்



''டேய் பாபு, சிரிப்புக்கு எதிர்ப்பதம் என்ன?''

''டி.வி. சீரியல் ஸார்!''

– தேனி முருகேசன்



''ராமு கரும்பலகையில என்ன எழுதியிருக்கே?''

''கேசவன் ஓட்டி வந்த ஆரஞ்சுப் பழ வண்டி விபத்துக்கு உள்ளானது என்பதை எழுதி இருக்கேன் சார்.''

– வி.திலக் ராஜ்குமார், ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீசாரதா பாலமந்திர் ஆண்கள் மெட்ரிக் பள்ளி, சேலம் – 1




''இந்த பஸ்ஸை எப்ப எடுப்பீங்க...?''

''பஸ்ஸைத் தள்ளறதுக்கு நாலு பேர் வந்தா எடுத்துடுவோம்.!''

– எஸ்.மெகந்திபாரதி, ஆறாம் வகுப்பு, பழனியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கோபி.

ஜிம்மிக்கு வழி காட்டுங்கள்!



குட்டீஸ் கோகுலம்

ஜிம்மி தன்னோட வீட்டுக்குப் போக வழிகாட்டி 'ஹெல்ப்' பண்ணுங்க குட்டீஸ்!

"என்னது திருவிழாவே பார்த்ததில்லையா நீ?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள் தமிழ்ச்செல்வி.

அருண் சரண்யா

ரஞ்சனுக்குக் கொஞ்சம் கூச்சமாக இருந்தது. கிராமத்துக்கு அவன் வருவது இது தான் முதல் தடவை. என்ன செய்ய? அவன் சென்னையிலேயே பிறந்து சென்னையிலேயே வளர்ந்தவன்.

ரஞ்சனுடையது வசதியான குடும்பம். அவனுடைய அப்பா ஒரு பெரிய நிறுவனத்தில் உயர் அதிகாரி. இப்போதுகூட அலுவலக விஷயமாக ஒரு வாரம் ஜப்பானுக்குப் போயிருக்கிறார். அமெரிக்காவில் இருக்கும் ரஞ்சனின்





அக்காவுக்கு குழந்தை பிறக்கப் போகிறது. பிரசவ நேரத்தில் அவருடன் இருந்து உதவி செய்வதற்காக அம்மாவும் கிளம்பி விட்டாள்.

''ரஞ்சனைப் பற்றிக் கவலையில்லை. என் தம்பி பார்த்துக் கொள்வான்'' என்றார் அப்பா.

ஆக, சென்னையின் இன்னொரு பகுதியில் இருந்த சித்தப்பா வீட்டில் கொஞ்ச நாட்கள் ரஞ்சன் இருந்தான்.

நடுவில் சித்தி வீட்டு உறவினர் ஒருவரின் திருமணத்துக்காக அழைப்பிதழ் வந்தது. உடனே சித்தப்பா, ''நாமெல்லாம் நல்லூர் கிராமத்துக்கு போய் வரலாம். உனக்கும் அது ஒரு வித்தியாசமான அனுபவமாக இருக்கும். தவிர, இப்போது அங்கே கோவில் திருவிழா வேறு. வா

புது வரவு

கிராமியக் கலைகள்-1

போகலாம்'' என்றார். அதுதான், இப்போது ரஞ்சனின் கிராம விஜயம். சித்தியின் தம்பி மகள் இந்த தமிழ்ச்செல்வி. அவளும் அவர்களோடு இப்போது திருவிழா பார்க்க வந்திருக்கிறாள்.

ரஞ்சனின் கவனம் ஆடிக் கொண்டிருந்த கரகாட்டக்காரரின்மீது சென்றது. ஏதோ ஒரு சினிமாவில் பார்த்ததுண்டு. மற்றபடி கரகம் ஆடுவதை இப்போதுதான் நேரே பார்க்கிறான். ஆடுபவரின் தலையில் இருந்த கரகத்தின் உச்சியில் கிளி ஒன்று இருந்தது. நிஜக் கிளி அல்ல, பேப்பரில் செய்யப்பட்ட கிளி! கரகாட்டக்காரர் ஆடும்போது அந்தக் கிளியும் சுற்றிச் சுற்றி அசைவது பார்ப்பதற்கு வெகு அழகாக இருந்தது.

ரஞ்சனின் ஆச்சர்யமான பார்வையைப் பார்த்த சித்தப்பா விளக்கத் தொடங்கினார்.

''நம் தமிழ்நாடு மிகமிகப் பழமையான பாரம்பரியம் கொண்டது. இங்கே கிராமக் கலைகள் செழித்து வந்தன. அவற்றில் முக்கியமானது கரகாட்டம். கரகாட்டத்தில் தலையில் குடத்தை வைத்துக்கொண்டு ஒருவர் ஆடுவார். சுற்றிவர இசைக் கருவிகள் முழங்கும். தவில், நாதஸ்வரம், உடுக்கை, பம்பை இப்படிப் பலவித இசைக் கருவிகள். இவற்றின் ஒலிக்கேற்ப நடனமாட வேண்டும்.''

சித்தப்பா பேசிக் கொண்டிருந்தபோதே இசையின் வேகம் அதிகமானது. அதற்கேற்றாற்போல் கரகாட்டக்காரர் அங்கும் இங்கும்





கரகாட்டம்!

வேகமாக நகர்ந்து ஆடியது நன்றாக இருந்தது.

''அடடா, குடம் விழுந்துவிடப் போகிறது'' என்று பதற்றப்பட்டான் ரஞ்சன்.

''அதெல்லாம் விழாது'' என்றாள் தமிழ்ச்செல்வி.

''ஏன் விழாது? இவ்வளவு வேகமாக ஆடியும் குடம் விழவில்லையே! ஒருவேளை தலையில் சேர்த்து இதைக் கட்டியிருப்பார்களோ'' என்றான் ரஞ்சன்.

''அப்படியெல்லாம் இதிலே எந்த ஏமாற்று வேலையும் கிடையாது. சொல்லப்போனால் கீழே வைத்திருக்கும் கரகத்தை எல்லார் முன்னாலும் தான் கரகாட்டக்காரர் எடுத்து தன் தலையில் வைத்துக்கொள்வார்'' என்ற சித்தப்பா, கரகாட்டம் தொடர்பான வேறு சில சுவையான தகவல்களையும் கூறினார்.

''முன்னொரு காலத்திலே மண் பானையைத் தலையில் வச்சுக்கிட்டு ஆடினாங்க. பிறகு வெண்கலக் குடத்தை வச்சுக்கிட்டு ஆடினாங்க. இப்போது எவர்சில்வர் குடங்களைக்கூட வச்சுக்கிட்டு கரகாட்டம் நடக்கிறது.''

''எதுக்காக கரகாட்டம் ஆடறாங்க? ஏதாவது விசேஷக் காரணம் உண்டா?''

''மாரியம்மனுக்கும், கங்கை அம்மனுக்கும் மழைக்காக நேர்ந்துகொண்டு தலையில் தண்ணீர் குடத்தைச் சுமந்தபடி ஆடுவது அந்தக்கால வழக்கம். சின்னம்மை, காலரா போன்ற நோய்கள் ஏற்படாமல் இருக்க, அம்மனுக்கு வேண்டுதல் நிறைவேற்றும் விதமாகத்தான் தொடக்கத்தில் கரகாட்டம் ஆடப்பட்டது. இப்போது திருவிழாக்களில் கரகாட்டம் ஆடுவது வழக்கமாகிவிட்டது'' என்றார் சித்தப்பா.


சின்னம்மை, காலரா போன்ற நோய்கள் ஏற்படாமல் இருக்க, அம்மனுக்கு வேண்டுதல் நிறைவேற்றும் விதமாகத்தான் தொடக்கத்தில் கரகாட்டம் ஆடப்பட்டது.

அப்படி அவர் கூறிக் கொண்டிருந்த போதே பெண் ஒருத்தியும் கரகாட்



துளிகள்...

மிகவும் பழமையான சங்க இலக்கியங்களில் குடக்கூத்து என்று இது குறிப்பிடப்பட்டுள்ளது. கரகத்தில் ஆட்ட கரகம், சக்தி கரகம் என்று இரண்டு வகைகள் உண்டு. ஆட்ட கரகம் என்பது கோயில்களில் ஆடப்படுவது. இதில் பக்தி கலந்த உற்சாகம் இருக்கும். சக்தி கரகத்தில் மக்களை மகிழ்விப்பதுதான் முக்கிய நோக்கம்!



டத்தில் கலந்துகொண்டாள். இருவரும் ஜோடியாக இசைக்கேற்ப ஆடினார்கள்.

நடுவே ஓர் ஏணி கொண்டு வரப்பட்டது. அதை அங்கிருந்த ஒரு வீட்டின் சுவர்மீது சாற்றினார் ஆண் கரகாட்டக்காரர். பிறகு அதன்மீது மெதுவாக ஏறினார்.

'தலையில் இருக்கும் குடம் விழாமல் எப்படித்தான் இந்த வித்தையெல்லாம் செய்கிறாரோ?' என்று ரஞ்சன் வியப்படையும்போதே கரகாட்டக்காரர் மெல்ல ஏணியிலிருந்து இறங்கினார். இப்போது இசை வேகமானது. கரகாட்டக்காரர் வேகமாக ஏணியில் ஏறி இறங்கினார். மக்கள் கைதட்டி மகிழ்ந்தனர்.

ரஞ்சனும் தமிழ்ச்செல்வியும் கூடத்தான்!

- ஆரம்ப காலத்தில் 'நையாண்டி மேளம்' என்கிற இசைக் கருவியின் ஒலிக்குதான் கரகாட்டம் ஆடுவார்கள். இப்போது வேறுசில இசைக் கருவிகளுக்கும் வாய்ப்பாட்டுகளுக்கும்கூட கரகம் ஆடுகிறார்கள்.

- கரகாட்டத்தின் பிறப்பிடம் தஞ்சாவூர். இப்போதுகூட பெரும்பாலான கரகாட்டக்காரர்கள் தஞ்சாவூர், புதுக்கோட்டை, பட்டுக்கோட்டை, இராமநாதபுரம், மதுரை, சேலம் போன்ற பகுதிகளில் இருந்துதான் வருகிறார்கள்.

- ஆந்திரப் பிரதேசத்தில் இதை 'கரகலு' என்கிறார்கள். கர்நாடகத்தில் 'கரகா' என்று அழைக்கிறார்கள்.

உழைப்பின் அர்த்தம்!

ஜூ. நடராசன்

"அம்மா... பசிக்குது... சாப்பாடு ஏதாச்சும் இருந்தா கொடுங்கம்மா..." தெருப் பக்கமிருந்து குரல் வரவே எட்டிப் பார்த்தாள் அம்மா.

''ஏம்மா, நம்மகிட்டதான் சூடா இட்லி இருக்கே... அவருக்குக் கொண்டுவந்து கொடுக்கலாமா?'' என்று கேட்டாள் அஸ்வினி.

''ம்... போய் எடுத்து வா'' என்று தாய் அனுமதி கொடுக்க, ''கொஞ்சம் இரு அஸ்வினி'' என்றார் அஸ்வினியின் தந்தை.

'அப்பா ஏன் தடுக்க நினைக்கிறார்? சென்ற வாரம்கூட, சக்கரம் பதிக்கப்பட்ட பலகை மீது அமர்ந்துவந்த பிச்சைக்காரருக்கு, சாப்பாடு கொண்டு போய்க் கொடுத்தாரே... இப்போது என்ன ஆயிற்று இவருக்கு?' மனத்தில் நினைத்தபடி தந்தையைப் பார்க்க, அவர் தெருவில் பிச்சை கேட்டுக்கொண்டு நின்றிருந்தவனை நோக்கிச் சென்றார்.

''ஏம்பா, நீ நல்லாதானே இருக்கே? ஏதாவது வேலை செய்து சம்பாதிச்சு சாப்பிடலாமே,'' என்றார்.

''யாரு சார் வேலை தர்றாங்க?'' என்றான் அவன்.

''அப்போ நீ உழைக்கத் தயாரா இருக்கே... கொஞ்சம் தோட்டத்துப் பக்கம் வா'' என்று அழைத்துச் சென்றார்.

''இதோ இந்தச் செடிகளைச் சுற்றி வேலி அமைக்கணும். அதற்காகத்தான் இந்த மூங்கில் குச்சிகளை வாங்கி வைத்திருக்கிறேன். நானும் உனக்குத் துணையா இருக்கேன். இந்த வேலியை அமைச்சுடலாம். உனக்கு உரிய கூலியைக் கொடுக்கிறேன்'' என்றார்.

இப்படி ஒரு சங்கடம் வரும் என எதிர்பார்க்காத அந்த பிச்சைக்காரன், வேறு வழியின்றி தோட்டத்தில் இறங்க,

''அஸ்வினி, இப்போ போய் இட்லியை எடுத்து வா'' என்றார் அப்பா.

அஸ்வினி ஒரு தட்டில் இட்லியை எடுத்து வந்து கொடுத்தாள்.

''இந்தாப்பா முதலில் இதைச் சாப்பிடு. பிறகு வேலை செய்யலாம்'' என்றார் அப்பா.

காலை மணி பதினொன்றுக்கும் மேலாகிவிட்டது. இரண்டு தேநீர் குவளைகளை எடுத்து வந்து கொடுத்தார் அம்மா.

''தம்பீ, உன்னோட பேரைச் சொல்லவே இல்லையே'' கேட்டார் அப்பா.

''என்னோட பெயர் தங்கமணி சார்.''

பெயரைக் கேட்டு புன்னகைத்தபடி, ''இங்கே வா, இந்த தேநீரைக் குடி'' என்றார்.

அந்தச் சூழ்நிலையைப் பார்த்தபோது

மனதுக்கு பரவசமாய் இருந்தது அஸ்வினிக்கு. அவளும் அவர்களுடன் வேலை செய்ய தோட்டத்தில் இறங்கினாள்.

மதிய உணவு நேரத்துக்கு முன்பாக வேலை முடிந்துவிட்டது.

''உன்னோட கூலி எவ்வளவுப்பா?'' அப்பா கேட்டார்.

''வேலை நீங்கதானே சார் கொடுத்தீங்க. நீங்க எவ்வளவு கொடுத்தாலும் சரிதான்.''

''நல்லாவே பேசறே. சரி...சரி... கை, கால் கழுவிக்கிட்டு வா. மதிய உணவை சாப்பிட்டு முடித்த பிறகு போகலாம்'' என்றார் அப்பா.

தோட்டத்திலேயே இருந்த வாழை மரத்திலிருந்து தந்தை வாழை இலை





யைக் கொண்டு வர, அதில் உணவைப் பரிமாறினார்கள்.

''நல்லா சாப்பிடுங்க அங்கிள்!'' அஸ்வினி இயல்பாய்ச் சொல்ல, மனம் நெகிழ்ச்சியடைந்தது தங்கமணிக்கு.

நூறு ரூபாயை எடுத்துக்கொண்டு வந்து தங்கமணியின் கையில் கொடுத்து, ''இது உன் உழைப்புக்கான கூலி'' என்றார் அப்பா.

அந்தப் பணத்தைக் கையில் வாங்கியபோது, கண்கள் பனித்தன. அவர்களைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டான் தங்கமணி. கண்களில் திரண்ட நீர் உருண்டு விழுந்தது.

''என்னப்பா ஆச்சு உனக்கு பணம் கிடைத்ததில் ஏற்பட்ட மகிழ்ச்சியா?'' அப்பா கேட்டார்.

''இல்லீங்க ஐயா! பணம் எனக்கு முன்பேகூட கெடைச்சிருக்கு. ஆனா, உழைப்புக்கு இருக்கிற கௌரவத்தை முதல்முதலா இன்றைக்குத்தான் உணர்வு பூர்வமா தெரிஞ்சுக்கிட்டேன்!

உழைச்சபோது நீங்க கொடுத்த உணவைச் சாப்பிட்டேன். அதில் ஒரு வித்தியாசம் தெரிந்தது. அஸ்வினி என்னை அங்கிள்ன்னு அழைத்தபோது என்னுடைய உழைப்புக்கு ஓர் அர்த்தம் தெரிந்தது. இப்போ, நீங்க கொடுத்திருக்கும் பணத்தின் உண்மையான மதிப்பு எனக்கு நன்றாகவே தெரியுது. ஒரு புதிய வாழ்க்கைப் பாடத்தை எனக்கு இன்று கற்றுக் கொடுத்திருக்கிறீர்கள். இனி எவரிடமும் பிச்சை கேட்க மாட்டேன். நிச்சயம் வேலை கேட்டு உழைப்பேன்'' என்று உறுதியோடு சொன்னான் தங்கமணி.

''அப்பா, உங்களை நினைச்சா பெருமையா இருக்கு'' என்றாள் அஸ்வினி.

''இது ஒன்றும் புதிய விஷயமில்லை

பணம் எனக்கு முன்பேகூட கெடைச்சிருக்கு. ஆனா, உழைப்புக்கு இருக்கிற கௌரவத்தை முதல்முதலா இன்றைக்குத்தான் உணர்வுபூர்வமா தெரிஞ்சுக்கிட்டேன்

அஸ்வினி. பசியோடு வருபவருக்கு மீன் தருவதைவிட மீன் பிடிக்கக் கற்றுக் கொடுப்பது சிறந்தது' என்பார்கள். அதைத்தான் நான் செய்தேன். தங்கமணி மீன் பிடிக்கக் கற்றுக்கொண்டான். இனி அவனுக்கு பசி ஒரு பிரச்னை இல்லை'' என்றார் அப்பா.

புது வரவு

ஹலோ, டாக்டர் ஸ்பீக்கிங்-1


டாக்டர் கு. கணேசன்

நன்றி ஜோசப்!

ஹலோ கோகுலம் குட்டீஸ்! நான்தான் டாக்டர் மாமா. இந்த புதிய பகுதி மூலம் ஒவ்வொரு மாதமும் மருந்துகள், மருத்துவக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட சுவையான சம்பவங்களை உங்களிடம் சொல்லப் போகிறேன்.

தெருநாய் கடித்தால் ''ரேபீஸ்'' என்ற வெறிநாய்க்கடி நோய் வரும். அதைத் தடுக்க, தொப்புளைச் சுற்றி ஊசி போட வேண்டும்.

ரேபீஸ் நோய்க்குத் தடுப்பூசி கண்டுபிடித்தவர் லூயி பாஸ்டர் (Louis Pasteur). இவர் பிரான்ஸ் நாட்டின் வேதியியல் அறிஞர். பால் மற்றும் உணவுகள் புளித்துப் போவதற்குக் கிருமிகளை அழிக்கும் ''பாஸ்டரைசேஷன்'' முறையையும், கால்நடைகளைத் தாக்கும் காலரா ஆந்ராக்ஸ் போன்ற நோய்களுக்குத் தடுப்பூசி கண்டுபிடித்தவரும் இவரே! என்றாலும் 1885வரை வெளி உலகுக்குத் தெரியாத விஞ்ஞானியாகவே இருந்தார்.



* லூயி பாஸ்டர்

அப்போது உலகில் எங்குமே வெறிநாய்க் கடிக்கு மருந்து இல்லை. பிரான்ஸில் மட்டும் ஆண்டுதோறும் இந்நோய்க்கு பல்லாயிரக் கணக்கில் பலியாயினர். இதனால் மனம் வருந்திய பாஸ்டர், வெறிநாய்க் கடிக்குத் தடுப்பூசி கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் இறங்கினார். இத்தனைக்கும் அவர் டாக்டர் இல்லை. என்றாலும் தன்னம்பிக்கையும் முயற்சியும் அவரது புதிய கண்டுபிடிப்புக்கு உதவின.

முதலில் வெறிநாயின் உமிழ்நீரில்தான் கிருமிகள் உள்ளன என்பதைக் கண்டறிந்தார். அக்கிருமிகளை ஆரோக்கியமான முயல்களின் உடலில் செலுத்தினார்.



✱ பாஸ்டரின் ஆராய்ச்சி திருவனம்...

✱ ஜோசப் மெய்ஸ்டர்



முயல்களின் உடலுக்குள் அந்நோய் பரவியது. ரேபீஸ், முதலில் முதுகுத் தண்டு வடத்தையே தாக்குகிறது என்பதால், அந்த முயல்களின் தண்டுவடத்திலிருந்த ஒரு திரவத்தை உறிஞ்சி எடுத்தார். பின்பு அத்திரவத்தை நன்கு உலர வைத்து அதிலுள்ள கிருமிகளைச் செயலிழக்கச் செய்தார். இப்போது இத்திரவத்தை ஒரு தடுப்பூசியாகப் பயன்படுத்தலாம் என்று பாஸ்டர் நம்பினார். உடனே ரேபீஸ் உள்ள முயல்களுக்கு அதைச் சிறிது சிறிதாகச் செலுத்தினார். அவரது நம்பிக்கை வீண் போகவில்லை. ரேபீஸ் நோயிலிருந்து முயல்கள் குணமடைந்தன. இந்த ஆராய்ச்சியை நாய்களிடமும் தொடர்ந்தார். நாய்களும் பிழைத்துக்கொண்டன.

ஆனால், அம்மருந்து மனிதர்களுக்குப் பயன்படுமா என்று பரிசோதித்துப் பார்க்க அவரால் முடியவில்லை. முயல், நாய்களுக்கு உண்டாக்கியதைப் போல தனக்குத்தானே ரேபீஸ் நோயை உண்டாக்கிக் கொண்டு, தடுப்பு மருந்தைப் போட்டுக் கொள்ளலாமா என்று யோசித்துக் கொண்டிருந்த போதுதான் அச்சம்பவம் நடந்தது.

அது 1885 ஜூலை மாதத்தில் ஒரு காலைப்பொழுது. ''ஜோசப் மெய்ஸ்டர்'' என்னும் ஒன்பது வயதுச் சிறுவன் பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்தபோது ஒரு அல்சேஷன் நாய் அவன்மீது பாய்ந்து, பதினான்கு இடங்களில் கடித்துக் குதறிவிட்டது. ஜோசப்பைக் கடித்தது வெறிநாய் என்பதால் அவனுக்கு மரணம் உறுதி என்பது டாக்டருக்குத் தெரிந்துவிட்டது. ஜோசப்பின் தாயாரோ, ''என் மகனை எப்படியாவது காப்பாற்றுங்கள்'' என்று கதறி அழுதார். அந்த டாக்டர், பாஸ்டரின் ஆராய்ச்சி பற்றி அறிந்து, ஜோசப்பை பாரிஸுக்கு அனுப்பினார்.

நாய்களிடம் பெற்ற வெற்றியை மனிதர்களிடம் பெற முடியுமா என்று யோசித்தார் பாஸ்டர். ஒருவேளை அதில் தோல்வியுற்றால் தமக்கு மரண தண்டனைகூட கிடைக்கலாம் எனக் கவலைப்பட்டார்.


ஜோசப்பின் அம்மாவோ அவருக்குத் தைரியம் ஊட்டினார். ''என் மகன் தடுப்பூசி போடாவிட்டாலும் இறக்கத்தான் போகிறான். உங்கள் மருந்தை செலுத்துங்கள். அவன் பிழைத்தால் மகிழ்வேன். பிழைக்காவிட்டால் உங்களை குறை கூற மாட்டேன்'' என்றார்.

அதன் பின்பு பாஸ்டர், ஜோசப்புக்கு தினமும் ஒரு ஊசி வீதம் பதினான்கு ஊசிகள் போட்டார். என்ன ஆச்சர்யம்! ஒவ்வொரு நாளும் ஜோசப்புக்கு முன்னேற்றம் தெரிந்தது. கடைசி ஊசி போட்ட பின்பு அவன் உடலில் ரேபீஸ் கிருமிகளே இல்லை. அதற்குப் பிறகு வெறிநாய் கடித்தவர்கள் பல பேர் பாஸ்டரைத் தேடி வர ஆரம்பித்தனர். பாஸ்டரின் புதிய கண்டுபிடிப்பு உலகம் முழுவதும் பரவியது. இவ்வாறு மருத்துவத்துறைக்கு ஒரு புதிய விடியலைத் தொடங்கி வைத்தான் சிறுவன் ஜோசப்.

இதனைத் தொடர்ந்து 1888ஆம் ஆண்டு நவம்பர் 14-ல் பாரிஸில் 'பாஸ்டர் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்' துவங்கப்பட்டது. இன்றும் அந்த நிறுவனத்தின் நுழைவாயிலில் ரேபீஸ் நோயிலிருந்து மீண்ட முதல் சிறுவன் ஜோசப்பின் சிலை இருக்கிறது. ஜோசப்புக்கு நன்றி சொல்ல இதைவிட பொருத்தம் வேறு உண்டா... என்ன?

சரி குட்டீஸ்! டாக்டர்களின் கழுத்தில் மாலையாகப் புரளும் 'ஸ்டெத்தாஸ்கோப்' பற்றி அடுத்த மாதம் பார்ப்போமா?

மருத்துவ மேதைகள் - ஹிப்போகிரேட்ஸ்



இவர் 'அலோபதி மருத்துவத்தின் தந்தை' என்று அழைக்கப்படும் கிரேக்க மருத்துவர். கி.மு.460ல் கிரேக்க நாட்டில் 'கோஸ்' தீவில் பிறந்தவர். பேய், பிசாசுகளால்தான் மக்களுக்கு நோய் வருகிறது என்றும் மந்திரம், மாந்திரீகம் போன்றவற்றால் நோய்களைக் குணமாக்கலாம் என்றும் நம்பிக்கொண்டிருந்த காலத்தில் இரத்தம், பித்தம், சளி இவற்றால்தான் நோய்கள் உண்டாகின்றன என்றும் இயற்கை வழிமுறைகளாலும் வாழ்க்கைமுறை மாற்றங்களாலும் இந்நோய்களைக் குணமாக்க முடியும் என்றும் அலோபதி மருத்துவத்துக்கு அடித்தளம் அமைத்தவர். எந்த நோயாக இருந்தாலும் நோயாளியை நேரடியாகப் பரிசோதித்து நோயின் அறிகுறிகளைக் கவனித்து, நோயைக் கணித்து சிகிச்சை தர வேண்டும் என்று மருத்துவர்களுக்கு வழிகாட்டியவர். இறந்தவர் உடலைப் பிளந்து பரிசோதிப்பது பாவம் என்று நம்பிக்கொண்டிருந்த காலத்தில், இறந்த உடலை முழுமையாகப் பரிசோதித்து, மனிதனின் 'உடற்கூறு' பற்றி முதன்முதலில் விளக்கியவர். கிரேக்க நாட்டிலும் ஆசியா மைனர் பகுதிகளிலும் மருத்துவம் செய்துகொண்டே மக்களுக்கு போதித்தவர். இவருடைய மருத்துவ அனுபவங்களை சுமார் எண்பது கையெழுத்துப் பிரதிகளில் எழுதி வைத்திருந்தார். மருத்துவர்களும் மருத்துவ மாணவர்களும் ஆற்ற வேண்டிய கடமைகள் மற்றும் நெறிமுறைகள் குறித்த 'ஹிப்போகிரேட்ஸ் உறுதிமொழி'யை இன்றைக்கும் அலோபதி மருத்துவர்கள் பின்பற்றுகின்றனர்.

கடவுளைக் கண்டேன்!

கதை. படம்: வீரமுடி




வேலு வலியால் துடிதுடித்துக் கீழே சரிந்தான்.
ஆ! பாம்பு வேலுவைக் கடித்துவிட்டதே!
கழுத்தில் கிடந்த டாலர் கயிற்றை வைத்து, விஷம் ஏறாமல் காலைக் கட்டினான் பாலு.
அந்தப் பக்கமாக வந்த ஆட்டோவில் வேலுவைத் தூக்கி வைத்து பக்கத் திலுள்ள கிளினிக்கில் சேர்த்தான்.
மருத்துவர்கள் வேகமாகச் செயல்பட்டு சிகிச்சையளித்தனர்.
கவலைப் படாதே, பிழைத்துக் கொள்வான்!
வேலுவின் வீட்டுக்குத் தகவல் சொல்லப் பட்டது. அவனின் அப்பாவும் அம்மாவும் வந்தார்கள்.
சிறிது நேரத்தில் கண் விழித்தான் வேலு.
பாலு என்னை மன்னித்துவிடு. உன் ரூபத்தில் கடவுளைக் கண்டேன். இனி ஒழுங்காகப் படிக்கிறேன்.

தன்மியலா

* கரும்பின் தாயகம் இந்தியா.
* கரும்பின் விஞ்ஞானப் பெயர் 'சக்கரம் அபிசினாரம்' ஆகும்.
* வேதங்கள் கரும்பு பற்றி கூறுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சாணக்கியரும், சுஷ்ருதரும் கரும்பு பற்றி குறிப்பிட்டுள்ளனர்..
* புறநானூறு, பத்துப் பாட்டு, சீவகசிந்தாமணி ஆகிய பழந்தமிழ் இலக்கிய நூல்களில் கரும்புச் செய்திகள் ஏராளம் உள்ளன.
* இந்தியாவுக்கு படையெடுத்து வந்த அலெக்சாண்டர், தமது நாட்டுக்குத் திரும்பிப் போகும்போது, கரும்பை 'இனிப்பான நாணல்' என்று போற்றி அவரது நாட்டில் நட்டு வளர்த்தார்.
* கன்னல், கழை, இக்கு, வேழம், வெகுரசம், வெண்டு, துண்பு, ஆலை, அங்காரிகை, ஈர், இக்கலம் ஆகியவை தமிழில் கரும்பின் வேறு பெயர்கள்!
* அதியமான் காலத்தில் கரும்பிலிருந்து வெல்லம் தயாரிக்கும் தொழில் நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டது.

கரும்பே!



தெரியுமா?

* கி.பி.9 ஆம் நூற்றாண்டில் எகிப்தில் கரும்பு சாகுபடி அறிமுகமானது.
* கி.பி. 14ஆம் நூற்றாண்டில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு பரவியது.
* நூறு கிலோ கரும்பிலிருந்து ஏழு முதல் பத்து கிலோ சர்க்கரை கிடைக்கிறது.
* கியூபா நாடு, 'உலகின் சர்க்கரைக் கிண்ணம்' என்று அழைக்கப்படுகிறது.
* இந்தியாவின் 'சர்க்கரைக் கிண்ணம்' என அழைக்கப்படுவது உத்திரபிரதேச மாநிலம்.
* கரும்பில் பல வகைகள் உண்டு. அவை செங்கரும்பு, நாமக் கரும்பு, கறுப்புக் கரும்பு, வெண் கரும்பு, பேய்க் கரும்பு, ஓல்லிக் கரும்பு, வரிக் கரும்பு, குண்டுக் கரும்பு, ஆலைக் கரும்பு முதலியவை ஆகும்.

கரும்பே!



திருவாழத்தான்

வானொலி பெட்டிகளுடன் பழகிப் பழகி, ராகவேலு ரேடியோவாகவே ஆகிவிட்டான். அதாவது அவனுடைய



நகைச்சுவைக் கதை

ரேடியோ ராகவேலு!

இடது காதில் திருச்சி வானொலி நிலைய நிகழ்ச்சிகள் கேட்கத் தொடங்கின. அது எப்படி?

ராகவேலுவின் அப்பா பொறியியல் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர். எலக்ட்ரானிக் கடை வைத்து, டி.வி., டேப் ரிகார்டர், ரேடியோ, சி.டி.ப்ளேயர் பழுது பார்க்கும் தொழில் தொடங்கினார். ராக வேலு குழந்தையாக இருக்கும்போதே அப்பாவின் கடைக்குச் சென்று வருவான்.

அவனுடைய விளையாட்டுப் பொருட் களே ஸ்குரு ட்ரைவர், ஸ்பானர், டெஸ்ட் டர், வால்வ், கபாசிட்டர் என்று இருந்தன.

ஒரு சமயம் இடது காதில் 'உய்...உய்' என ஓசை வந்தது. இடது கை சுண்டு விரல் கொண்டு காதைக் குடைந்து கொண் டான். ஓசை நிற்கவில்லை. அப்புறம் வயலின் இசை ஒலி வந்தது. வானொலி நிலையத்தில் நிகழ்ச்சி தொடங்கப்படு வதற்கு முன்பாக காலை, பிற்பகல், மாலை நேரங்களில் போடுவார்களே அந்தத் தொடக்க இசை ஒலி!

அப்போது அவனுக்கு வயது ஆறு. ''அப்பா, அப்பா! என் காதுலே ரேடியோ கேக்குது'' என்றான்.

''ரேடியோன்னா காதுலேதான் கேட் கும் டி.வி.ன்னா கண்ணுலே தெரியும்'' என்றார் அப்பா.

''அது இல்லே, அப்பா! டிரான்சிஸ்டர் இல்லாம காதுலே பாட்டு கேட்குது!''

அவனை ஏற இறங்கப் பார்த்தார். குனிந்து அவனுடைய காதைப் பிடித்து உயர்த்தி, உள்ளே நோக்கினார். பயல் எதையாவது காதுக்குள் போட்டுக் கொண்டு விட்டானோ என்ற சந்தேகம். அவனுடைய காதோடு தன் காதை வைத்து உன்னிப்பாகக் கேட்டார். ஆமாம்! 'ஙீ... ஙிங்ஙிங்ஙி...ஙீ...' சத்தம் கேட்டது.

அப்பா பயந்துவிட்டார். கடையைப் பார்த்துக் கொள்ளும்படி உதவியாளரிடம் சொல்லிவிட்டு, அவனை இழுத்துக் கொண்டு அருகில் இருந்த 'காது, மூக்கு, தொண்டை' மருத்துவரிடம் ஓடினார்.

மருத்துவர் ராகவேலுவை கவனித் தார். காதில் வானொலி நிகழ்ச்சிகள் கேட் கின்றன என்று அவன் சொன்னதை அவர் நம்பவில்லை. ''ரேடியோவ இந்தச் சின் னக் காதுக்குள்ளே போட்டுக்க முடி யாதே!'' என்று கூறி அவனுடைய காது மடலை இழுத்து, உள்ளே பார்த்தார். ஸ்டெதாஸ்கோப்பை காதின் மீது வைத்துக் கேட்டார். 'தாய் இரங்காவிடில்

சேய் உயிர் வாழுமோ...' என்னும் பாட்டு கேட்டது.

''அட, நீ இரங்காய் எனில் புகல் ஏது...ங்கிற அடாணா ராகப்பாட்டு!'' என்று மருத்துவர் வியப்புடன் கூறினார். அவர் கர்னாடக சங்கீதப் பிரியர் என்பது ராகவேலுவின் அப்பாவுக்குப் புரிந்தது.

''இப்படி ஒரு கேஸ் என்னிடம் வந்ததே இல்லை. இப்படிப் பாட்டுக் கேட்கறதுக்கு என்ன பண்ணினே?'' என்று ராகவேலுவிடம் கேட்டார்.

''ஒண்ணும் பண்ணலயே'' என்றான்.

வானொலி நிலைய அறிவிப்பாளர் காதுக்குள் பேசினார். ''அகில இந்திய வானொலியின் திருச்சி நிலையம்... இது வரை பாடியவர் செல்வி காஞ்சனா அவர்கள். பக்க வாத்தியம் வாசித்தவர்கள்...''

''என்ன பண்றதுன்னு எனக்குத் தெரியலியே!'' கைகளைப்



பிசைந்தார் மருத்துவர். பிறகு அவனுடைய அப்பாவைப் பார்த்து, ''நீங்க இவனை சென்னைக்குக் கூட்டிப் போய் பெரிய டாக்டரைப் பாருங்க'' என்றார்.

ராகவேலுவால் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. வீட்டிலும் பாடங்களை வாசிக்க முடியவில்லை. காதில் மாற்றி மாற்றி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தன. காலையில் 'வந்தே மாதரம்' தொடங்கி, நாதஸ்வரம் வாசிக்கப்பட்டு, நிகழ்ச்சி நிரல் சொல்லி, பக்திப் பாடல்கள் கேட்டு, அப்புறம் கர்னாடக சங்கீதம், சினிமாப் பாட்டு, மண்ணும் மணமும், செய்திகள், கதாகாலட்சேபம் என்று அவன் வானொலி நிலையமாகவே மாறிப் போனான்.

சென்னைக்கு அழைத்துச் சென்றார் அப்பா. ரயிலில் போகும்போது இரவு மணி பதினொன்று வரை நிகழ்ச்சிகள் இருந்தன. அதன் பின் ராகவேலு உறங்கி விட்டான்.

காலையில் சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் இறங்கியபோது, அதிசயம்! ''அப்பா, அப்பா! காதுலே பாட்டு கேட்கல்லே!'' என்றான்.

திகைத்துப் போன அப்பா, ''என்னடா சொல்றே?'' என்று சிடுசிடுப்புடன் கேட்டார்.

''பாட்டு ஏதும் கேட்கல்லே, அப்பா''

''அப்படீன்னா இப்ப என்ன பண்றது? பெரிய டாக்டரைப் பார்த்து என்னன்னு சொல்றது?'' என்று திகைத்தார்.

அடுத்த ரயிலைப் பிடித்து அப்பாவும், மகனும் திருச்சி திரும்பினர். ஊரை நெருங்கிய சமயம் ராகவேலுவின் காதுகளில் மீண்டும் பாடல் ஒலித்தது. அப்புறம்தான் அப்பா ஒரு விஷயத்தைக் கண்டுபிடித்தார். திருச்சி வானொலி நிலைய அலைவரிசையில் அவன் காது இருக்கிறது. அதனால் மற்ற நிலையங்களின் நிகழ்ச்சிகளை அவனுடைய காது ஒலிபரப்பாது!

ஆகவே, தன் மகனின் நலனுக்காக அவர் குடும்பத்துடன் சென்னைக்கு வந்து விட்டார். ராகவேலுவின் காதுகளில் ஒலிபரப்பாகும் குரலும் நின்றுபோனது!



பெயர் : ....

முகவரி : ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 032

இந்த மாத மினி கோகுலம் 'க்விஸ் 2007'. மினி கோகுலத்துக்கு உங்களையும் யோசனை கேட்டிருந்தோமல்லவா? நிறைய பேர் நிறைய யோசனைகளை எழுதியுள்ளீர்கள். 'கடந்த வருடம் நடந்த முக்கியமான நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தரலாம்' என்று எழுதியிருந்தார் கோ.பிரவீண்குமார் **(உறுப்பினர் எண்.18) ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி வித்யாலயா பள்ளி, விழுப்புரம்.**

இவருக்கு **ரூபாய் 50/-** பரிசு வழங்கப்படுகிறது. இவரது

ஹலோ குட்டீஸ்!



யோசனையில் சற்று மாற்றம் செய்து, வழங்கப்படுவதுதான் 'க்விஸ் 2007'. உலகில் நடக்கும் விஷயங்களை நீங்கள் எந்த அளவுக்குத் தெரிந்து கொள்கிறீர்கள், அதை எந்தளவுக்கு நினைவில் வைத்துள்ளீர்கள் என்பதை அறியவும், பயனுள்ள வகையில் நேரத்தைச் செலவிடவும் இது உதவும்.

வழக்கம் போல் 37ஆம் பக்கத்திலிருந்து 44ஆம் பக்கம் வரை தனியே எடுங்கள். அதை இரண்டாக மடித்துக் கத்தரித்து, ஸ்டேப்ளரைக் கொண்டு 'பின்' செய்யுங்கள். பதினாறு பக்க மினி கோகுலம் ரெடி! கடந்த ஆண்டு நடந்த முக்கிய சம்பவங்கள், ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. யோசித்து சரியான விடையை 'டிக்' செய்யுங்கள். பிறகு உங்கள் விடையைச் சரிபார்த்துக்கொள்ளுங்கள்.



பென்சிலில் 'டிக்' செய்தால், அழித்துவிட்டு மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளலாம். நண்பர்களுடன் சேர்ந்தும் இந்த 'க்விஸ்' விளையாட்டை விளையாடலாம். மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!

அன்புடன்
ஆசிரியர்



க்விஸ் 2007






தொகுப்பு : ராஜ்

இங்கே மடித்து கத்தரிக்கவும்


இங்கே பின் செய்யவும்



மினி கோகுலம்



க்விஸ் 2007





பரிட்சை டிப்ஸ்

அடுத்த மினி கோகுலம்...



பி.எஸ்.எல்.வி - சி7

1. ஆஷஸ் டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலிய அணி 5-0 எனக் கைப்பற்றிய தினம்.

அ. ஜனவரி 10 ☐

ஆ. ஜனவரி 5 ☐

இ. ஜனவரி 15 ☐

2. தமிழகத்தில் 'வாட்' வரி அமலுக்கு வந்த தினம்

அ. ஜனவரி 1 ☐

ஆ. ஜனவரி 11 ☐


இ. ஜனவரி 21 ☐

3. ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து நான்கு செயற்கைக் கோள்களுடன் பி.எஸ்.எல்.வி- சி 7 ராக்கெட் புறப்பட்ட தினம்.

அ. ஜனவரி 10 ☐

ஆ. ஜனவரி 16 ☐

இ. ஜனவரி 24 ☐



க்விஸ் 2007

4. ரோஜா மணம் வீசும் தபால் தலைகளை மும்பையில் வெளியிட்ட தினம்

அ. பிப்ரவரி 2 ☐

ஆ. பிப்ரவரி 5 ☐

இ. பிப்ரவரி 7 ☐

5. கலிஃபோர்னியாவில் ஆஸ்கார் விருது வழங்கப்பட்ட தினம்

அ. பிப்ரவரி 3 ☐

ஆ. பிப்ரவரி 13 ☐

இ. பிப்ரவரி 25 ☐

6. 'பெப்சி' குளிர்பான நிறுவனத்தின் தலைவராக 'இந்திரா நூயி' தேர்ந்தெடுக்கப்பட்ட தினம்.

அ. பிப்ரவரி 6 ☐

ஆ. பிப்ரவரி 5 ☐

இ. பிப்ரவரி 4 ☐



இந்திரா நூயி

க்விஸ் 2007



விடைகள்

1. ஆ, 2. அ, 3. அ, 4. இ, 5. இ,
6. ஆ 7. அ, 8. ஆ, 9. இ, 10. ஆ,
11. அ, 12. ஆ , 13. அ, 14. ஆ, 15. இ,
16. அ, 17. ஆ, 18. இ 19. ஆ, 20. அ,
21. ஆ, 22. அ, 23. ஆ, 24. இ, 25. அ,
26. இ, 27. அ, 28. இ, 29. அ, 30. அ,
31. அ, 32. இ, 33. ஆ, 34. அ, 35. ஆ,
36. இ

க்விஸ் 2007



பேனசீர் புட்டோ

34. பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பேனசீர் புட்டோ பலியான தினம்

அ. டிசம்பர் 27 ☐

ஆ. டிசம்பர் 28 ☐

இ. டிசம்பர் 29 ☐

35. பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடரை இந்தியா கைப்பற்றிய தினம்

அ. டிசம்பர் 10 ☐

ஆ. டிசம்பர் 12 ☐

இ. டிசம்பர் 13 ☐

36. குஜராத்தின் முதல்வராக நரேந்திர மோடி மீண்டும் பதவியேற்ற தினம்

அ. டிசம்பர் 21 ☐

ஆ. டிசம்பர் 23 ☐

இ. டிசம்பர் 25 ☐

க்விஸ் 2007



பாப் உல்மர்

7.பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் 'பாப் உல்மர்' மரணமடைந்த தினம்

அ. மார்ச் 18 ☐

ஆ. மார்ச் 9 ☐

இ. மார்ச் 27 ☐

8. மணிப்பூர் மாநிலத்தின் முதல்வராக 'இபோபி சிங்' பதவியேற்ற தினம்

அ. மார்ச் 1 ☐

ஆ. மார்ச் 2 ☐

இ. மார்ச் 3 ☐

9. பாகிஸ்தான் தலைமை நீதிபதியாக 'பகவான் தாஸ்' பதவியேற்ற தினம்

அ. மார்ச் 4 ☐

ஆ. மார்ச் 14 ☐

இ. மார்ச் 24 ☐

க்விஸ் 2007

10. ஒலியைவிட வேகமாகச் செல்லும் 'பிரம்மோஸ்' ஏவுகணை பத்தாவது முறையாக ஏவப்பட்ட தினம்.

அ. ஏப்ரல் 20 ☐

ஆ. ஏப்ரல் 22 ☐

இ. ஏப்ரல் 24 ☐

11. மதுரையில் முதன்முதலாக விமானப்படையினரின் சாகசம் நடந்த தினம்

அ. ஏப்ரல் 25 ☐

ஆ. ஏப்ரல் 15 ☐

இ. ஏப்ரல் 10 ☐

12. உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா சாம்பியனான தினம்

அ. ஏப்ரல் 30 ☐

ஆ. ஏப்ரல் 28 ☐

இ. ஏப்ரல் 20 ☐

க்விஸ் 2007



உலகக் கோப்பை 2007

31. சேலத்தில் புதிய ரயில்வே கோட்டம் தொடங்கிய தினம்

அ. நவம்பர் 1 ☐

ஆ. நவம்பர் 9 ☐

இ. நவம்பர் 14 ☐

32. விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர் தமிழ்ச்செல்வன் பலியான தினம்

அ. நவம்பர் 12 ☐

ஆ. நவம்பர் 22 ☐

இ. நவம்பர் 2 ☐

33. பாகிஸ்தான் இராணுவ தளபதி பதவியிலிருந்து முஷாரப் விலகிய தினம்

அ. நவம்பர் 23 ☐

ஆ. நவம்பர் 28 ☐

இ. நவம்பர் 30 ☐

க்விஸ் 2007



முஷாரப்



28. அமெரிக்க 'லூசியானா' மகாணத்தின் கவர்னராக இந்திய வம்சாவளி 'பாபி ஜிண்டால்' தேர்வான தினம்

அ. அக்டோபர் 2

ஆ. அக்டோபர் 12

இ. அக்டோபர் 20

29. இந்தோனேஷியாவில் 7.1 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்ட தினம்

அ. அக்டோபர் 25

ஆ. அக்டோபர் 15

இ. அக்டோபர் 10

30. செஸ் போட்டியில் விஸ்வநாதன் ஆனந்த் உலக சாம்பியன் பட்டம் வென்ற தினம்

அ. செப்டம்பர் 29

ஆ. அக்டோபர் 1

இ.அக்டோபர் 13

க்விஸ் 2007



13. உத்தரபிரதேச முதல்வராக 'மாயாவதி' பதவி யேற்ற தினம்

அ. மே 13

ஆ. மே 15

இ. மே.17

14. மத்திய தகவல் மற்றும் தொலைதொடர்புத்துறை அமைச்சராக ஏ.ராஜா பதவியேற்ற தினம்

அ. மே 6

ஆ. மே 16

இ. மே.26

15. வங்கதேசத்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா வென்ற தினம்

அ. மே 20

ஆ. மே 24

இ. மே 27

க்விஸ் 2007

16. கட்டாய ஹெல்மெட் சட்டம் தமிழகத்தில் அமலுக்கு வந்த தினம்

அ. ஜூன் 1

ஆ. ஜூன் 10

இ. ஜூன் 20

17. தமிழக அரசுப் பள்ளிகளில் செயல்வழி கற்கும் திட்டம் அமுலுக்கு வந்த தினம்

அ. ஜூன் 4

ஆ. ஜூன் 12

இ. ஜூன் 16

18. இங்கிலாந்தின் புதிய பிரதமராக 'கார்டன் பிரவுன்' பதவியேற்ற தினம்

அ. ஜூன் 7

ஆ. ஜூன் 17

இ. ஜூன் 27

க்விஸ் 2007



25 'இன்சாட்' ரக செயற்கைகோளை, இந்திய ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்திய தினம்.

அ. செப்டெம்பர் 2

ஆ. செப்டெம்பர் 4

இ. செப்டெம்பர் 6

26. வங்கதேசத்தில் ஆயிரக்கணக்கானோர் இறக்க காரணமாக 'சிதார்' புயல் தாக்கிய தினம்

அ. செப்டெம்பர் 6

ஆ. செப்டெம்பர் 10

இ.செப்டெம்பர் 16


27. உலகக் கோப்பை 20-20 போட்டியில் இந்திய சாம்பியனான தினம்

அ. செப்டெம்பர் 24

ஆ. செப்டெம்பர் 22

இ. செப்டெம்பர் 21

க்விஸ் 2007



பிரதீபா பாட்டீல்



19 'பிரதீபா பாட்டீல்' ஜனாதிபதியாக பதவியேற்ற தினம்

அ. ஜூலை 20 ☐

ஆ. ஜூலை 25 ☐

இ. ஜூலை 22 ☐

20. 'ஹாரி பாட்டர்' ஏழாவது பாகம் வெளியான தினம்

அ. ஜூலை 21 ☐

ஆ. ஜூலை 19 ☐

இ. ஜூலை 17 ☐

21. தமிழகத்தில் சத்துணவுடன் வாரம் மூன்று முட்டை வழங்கும் திட்டம் தொடங்கிய தினம்.

அ. ஜூலை 10 ☐

ஆ. ஜூலை 15 ☐

இ. ஜூலை 18 ☐



க்விஸ் 2007

அமீத் அன்சாரி



22. 'டுவென்டி 20' உலகக் கோப்பையின் இந்திய கேப்டனாக தோனி தேர்வான தினம்

அ. ஆகஸ்ட் 7 ☐

ஆ. ஆகஸ்ட் 15 ☐

இ. ஆகஸ்ட் 21 ☐

23. ஐ.சி.எல். அமைப்புக்கு எதிராக ஐ.பி.எல் (இந்தியன் பிரிமியர் லீக்) அறிமுகமான தினம்

அ. ஆகஸ்ட் 22 ☐

ஆ. ஆகஸ்ட் 24 ☐

இ. ஆகஸ்ட் 26 ☐

24. இந்தியாவின் துணை ஜனாதிபதியாக 'அமீத் அன்சாரி' பொறுப்பேற்ற தினம்

அ. ஆகஸ்ட் 1 ☐


ஆ. ஆகஸ்ட் 3 ☐

இ.ஆகஸ்ட் 11 ☐



க்விஸ் 2007

புள்ளிகளை இணையுங்கள்!




1 முதல் 58 வரையிலான புள்ளிகளை இணைத்தால் இங்கே இருப்பது யாரென்று தெரியும்!





எஸ். பரணிகுமார்,
பத்தாம் வகுப்பு,
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
அரித்துவாரமங்கலம்.

நா. ஜனார்த்தனம்,
பத்தாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்.





எஸ். பிரதீப்குமார்,
இரண்டாம் வகுப்பு,
எஸ்.ஆர்.டி.எஃப் விவேகானந்தா வித்யாலயா,
சென்னை.

உங்கள்

எம். தேவிபாலா,
பத்தாம் வகுப்பு,
சின்மயா வித்யாலயா,
ராஜபாளையம்.



ஏ. சுவாதி,
ஏழாம் வகுப்பு,
முருக தனுஷ்கோடி மகளிர் மேல்நிலைப் பள்ளி,
தண்டையார் பேட்டை.





ச. குணாளன்,
எட்டாம் வகுப்பு,
டி.ஏ.வி. பெல் பள்ளி,
இராணிப்பேட்டை.

கைவண்ணம்!

கோலம்!







சி.விநாயகமூர்த்தி

அகிலம் வியக்க...

காலையில் எழுவது நல் வழக்கம்
அது
காரியம் யாவிலும் கைகொடுக்கும்
கதிரவன் எழுமுன் எழுந்திடணும்
கடமைகள் கணக்காய் முடித்திடணும்
பாடங்கள் அன்றன்றே
படித்திடணும் - நாளை





பார்க்கலாம் என்பதைத்
தொலைத்திடணும்
மாலையில் நன்கு விளையாடிடணும்
நேரத்தில் உறங்கவே சென்றிடணும்.
திட்டமாய்க் காலத்தைச்
செலவிடணும் - வீண்

பேச்சினை முற்றிலும் நிறுத்திடணும்
அன்பினால் யாரையும்
கவர்ந்திடணும்
அகிலம் வியக்க உயர்ந்திடணும்!'



கல்யாணி பாலு

கவிதைப் பூங்கா

வண்ண வண்ண மாவினால்
வரைந்த வாசல் கோலம்
கண்ணை அள்ளும் பூவென
அன்னை வரைந்த கோலம்!

சின்னச் சின்னப் புள்ளிகள்
தன்னில் கொண்ட கோலம்
முன்னும் பின்னும் வளைவுகள்
மின்னும் பின்னல் கோலம்!

வருக வென்று பணிவுடன்
வணக்கம் சொல்லும் கோலம்
தரையில் விரித்த போர்வையாய்
தகதகக்கும் கோலம்!

எறும்பு தின்ன உதவும்
அரிசி மாவின் கோலம்
திரும்பத் திரம்ப முயன்றால்
திருத்தமாக மிளிரும்!

சிலந்தி வலையில் இருந்தபடி
சிக்கும் உயிர்களை உணவாக்கி
உண்டு வாழ்வைக் கழிக்கிறது
ஒருதுளி முயற்சி செய்வதில்லை!

ஆனால் பல்லி, இரைதேடி
அங்கும் இங்கும் செல்கிறது.
இரண்டில் எதைநாம் சிறப்பென்று
எற்றுக் கொள்வது சொல்லுங்கள்?

வாழ்வில் தேடும் மனிதருக்கே
வெற்றிப் புதையல் விருந்தாகும்.
உழைப்பு ஒன்றே சிறப்பு தரும்
உயர்ந்த வாழ்வை அமைத்துத் தரும்!



வெற்றிக்கு வழி!

வளர்கவி



பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரையிலுள்ள இளம் சாதனையாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதியிது. விளையாட்டு, பேச்சு, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்துகொண்டு பரிசு பெற்றிருந்தால் அது குறித்த விவரங்கள், புகைப்படம், சான்றிதழின் நகல் ஆகியவற்றை அனுப்புங்கள். சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார்பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு அளிக்கப்படும். மறக்காமல் பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். முக்கியமான நிபந்தனை, அந்தச் சாதனை கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப்பட்டதாக இருக்க வேண்டும். பழையது வேண்டாம்!

அனுப்ப வேண்டிய முகவரி :

கோகுலம், சாதனைத் தளிர்கள்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.



மாணம்பதி, அரசினர் மேல்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு படிப்பவர் கோபி. கடந்த ஆண்டு 'துளிர்' நடத்திய அறிவியல் வினாடி-வினா போட்டியில் பங்கேற்று, மாநில அளவில் மூன்றாம் இடமும், மாவட்ட அளவில் இரண்டாம் இடமும், மண்டல அளவில் முதல் இடமும் பெற்றுள்ளார். இவர் மேலும் பல பரிசுகளைப் பெற்று அறிவியலில் சிறக்க கோகுலம் சார்பில் வாழ்த்துவோம்!

சாதனைத் தளிர்கள்

சகலகலா லோகேஷ்!





விழுப்புரம், சரஸ்வதி மெட்ரிக் பள்ளியில் முதலாம் வகுப்பு படிப்பவர் லோகேஷ்வரன். மலரும் மொட்டுகள், சுட்டி லூட்டி, சூப்பர் சிங்கர் ஜூனியர் போன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்று அசத்தியுள்ளார். திருக்குறள் போட்டியிலும் பங்கேற்றுள்ளார். இதுவரை இருபத்தாறு சான்றிதழ்களை வாங்கிக் குவித்துள்ள இந்த சகலகலா ஜூனியர், மேலும் பல சாதனைகளைப் படைக்க வாழ்த்தி மகிழ்வோம்!

பதக்க ஐஸ்வர்யா!





புதுச்சேரி, ஆல்ஃபா மெட்ரிகுலேஷன் மேனிலைப் பள்ளியில் நான்காம் வகுப்பு படிப்பவர் ஐஸ்வர்யா. ஓவியம் மற்றும் கதை சொல்லும் திறன் போட்டிகளில் பல பரிசுகளைப் பெற்றுள்ளார். சமீபத்தில் ஓவியப் போட்டியில் பரிசும் சான்றிதழும் கிடைத்துள்ளன. தவிர, புதுச்சேரி முன்னாள் ஆளுனர் திரு.மல்கானி அவர்களிடம் பதக்கமும் பெற்றுள்ளார். ஐஸ்வர்யா மேலும் பல பதக்கங்களை குவிக்க நமது வாழ்த்துகளைத் தெரிவிப்போம்!

வி. ஜெயலட்சுமி

ஒரு காலத்தில் நாய், பூனை, எலி ஒற்றுமையாய் ஓர் அரசனிடம் வேலை செய்துகொண்டிருந்தன. நாய் மன்னனுக்கு காவலாக இருக்கும். மெய்க்காப்பாளனாகக் கூடவே செல்லும். பூனையும் எலியும் அதன் உதவியாளர்கள். இவை இரண்டும் நாய் சொல்கிற சிறு சிறு பணிகளைச் செய்து உதவியாக இருந்து வந்தன.

நாய் அன்றும் இன்றும் நன்றியுள்ள பிராணி. மன்னன் மாளிகை வாசலில் நாய்க்கு சவுகரியமாக ஓர் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பக்கத்திலேயே பூனையும் சற்றுத் தள்ளி ஒரு வளையில் எலியும்



தங்களைப் பத்திரப்படுத்திக்கொண்டன.

நாயின் மேல் அதிகமான பாசம் கொண்டிருந்தார் அரசர். ஒருநாள் அதற்கு ஒரு பரிசு கொடுத்தார். அழகு மிகுந்த எழுத்துகளால் எழுதப்பெற்ற நற்சான்றுப் பத்திரம்தான் அது! அதை அவர் நாயிடம் கொடுத்த போது பூனையும் எலியும் ஏதோ வேலையாக வெளியில் போயிருந்தன. 'சரி சரி, மாலையில் இருவரும் வந்ததும் நற்சான்றுப் பத்திரத்தைக் காட்டி மன்னர் வாழ்த்தியதையும் கூறலாம்'' என்று எண்ணிய நாய் தனது இருப்பிடத்தில் கொண்டு போய் வைத்துவிட்டு, மற்ற வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டது.

இதொன்றையும் அறியாத பூனையும் எலியும் வெளியிலிருந்து திரும்பி தங்கள் இருப்பிடத்துக்கு வந்தன. நாயின் இடத்திலிருந்த தங்கப் பத்திரம் பூனையின் கண்களுக்கு நேராக டாலடித்தது. ஓடிச்சென்று அதைக் கையில் எடுத்தது பூனை. ''எலியே! எலியே! இங்கு வந்து பாரேன்'' என எலிக்கு அழைப்பு விடுத்தது. எலியும் பார்த்தது.

பூனையின் கையில் தங்கப் பத்திரம். ''என்ன இது, என்னவாக இருக்கும்;'' என்று யோசித்த பூனை, பிறகு அதை தனது கூரிய நகங்களில் இழுத்து கிழித்தது. ''வேண்டாம் பூனையண்ணே! அதை இருந்த இடத்திலேயே வைத்து விடு'' என்று எலி எவ்வளவோ சொல்லியும் பூனை கேட்கவில்லை. பத்திரத்தை எடுத்து விளையாடி பிய்த்துப் பிய்த்துப் போட்டது.

அப்போது அங்கே வந்த நாய்

திடுக்கிட்டது. எலி முந்திக்கொண்டு, ''நாயண்ணே... நான் எவ்வளவோ சொல்லியும் பூனை கேட்கவில்லை. கிழிச்சுப் போட்டுடுச்சு. அது சரி, இது என்னண்ணே?'' என்றது அப்பாவி யாக.

''என்ன எலியாரே கோள்மூட்டி விடுகிறாயா? உன்னைக் கடித்துக் குதறுகிறேன் பார்'' என்று பூனை, எலியைத் துரத்தியது.

''எனது அருமை பத்திரத்தை நாசம் செய்து விட்டாயே, உன்னை விட்டேனா பார்'' என்ற நாய், பூனையைத் துரத்தியது. இன்று வரை மூன்றும் ஒன்றுக்கொன்று துரத்திக் கொண்டிருக்கின்றன!

வியட்நாம் நாட்டு நாடோடிக் கதை

தங்கப் பத்திரம்!



முனைவர் ஆசுரா

விண்வெளியில் சிலந்தி!



1973 ஜூலை மாதம் அனிதா, அரபெல்லா என்ற இரண்டு பெண் சிலந்திகள் விண்வெளிக்கு தங்கள் பயணத்தைத் தொடங்கின.

புவியீர்ப்பு விசை இல்லாத இடத்தில் சிலந்தியால் வலை பின்ன இயலுமா? என்கிற கேள்விக்கு விடை காணும்

செயலாளர் பறவை!

ஆப்பிரிக்க புல்வெளிகளில் இப் பறவைகள் அதிகமாக உள்ளன. கழுகு போன்ற தோற்றம், கொக்கு போன்று நீண்ட கால்கள். இதன் உயரம் நான்கரை அடிகள். எடை 3.3 கிலோ கிராம். இது, இறகை இரண்டு மீட்டர் வரை விரிக்க முடியும்.

செயலாளர் பறவையின் இறக்கைகள் மற்றும் கால்கள் கறுப்பு நிறம். உடலின் மேற்புறம் சாம்பல் நிறத்திலும், சில இடங்களில் வெள்ளை நிறத்திலும் காணப்படுகிறது. செனகல் முதல் சோமாலியா வரை சுற்றித் திரிகின்றன. பகலில் புல்வெளிகளில் ஓடித் திரிந்தாலும் இரவில் அக்கேசியா மரங்களில்தான் உறங்குகின்றன. காடுகள் அழிக்கப்பட்டு வருவது, இப் பறவையின் வாழ்வுரிமையைப் பறிப்பதாக உள்ளது.

பூச்சிகள், பல்லி, பாம்பு, சிறிய பறவைகள், பறவை முட்டைகள் போன்றவை உணவாக அமைகின்றன. 15 முதல் 20 அடி உயரமான அக்கேசியா மரங்களில் கூடு கட்டுகின்றன. தொடர்ந்து ஆறு மாதங்கள் கூட்டைக் கண்காணிக்கும் பணியை ஆண், பெண் என இரண்டும் செய்கின்றன. இரண்டு அல்லது மூன்று முட்டைகளை இடும். முட்டையின் நிறம் லேசான பச்சை.



இது சூடான் நாட்டின் தேசியச் சின்னமாக விளங்குகிறது. தென்னாப்பிரிக்க இராணுவ

புது வரவு

முயற்சியாக இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. சிலந்திகளின் செயல்பாட்டினைக் கண்காணிக்க புகைப்பட, வீடியோ கருவிகள் பொருத்தப்பட்டன. அரபெல்லா, அனிதா இரண்டு சிலந்திகளுக்கும் எடையற்ற நிலையைச் சமாளிக்கச் சிறிது கால அவகாசம் தேவைப்பட்டது. மறுநாள் அரபெல்லா, வலை பின்னத் தொடங்கியது. அடுத்தநாள் முழுவதுமான, அழகான வலையை அரபெல்லா சிலந்தி பின்னி முடித்தது. பூமியில் பின்னும் வலையைப் போல அது ஒரே சீரான ஒழுங்கோடு அமையவில்லை. சில இடங்களில் மெல்லியதாகவும் சில இடங்களில் தடிமனாகவும் காணப்பட்டது. ஆயினும் விண்வெளியில் சிலந்தியால் வலைப் பின்ன முடியும் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 13ஆம் தேதி அரபெல்லாவின் பாதி வலை நீக்கப்பட்டது. ஆனால், அரபெல்லா மீண்டும் முயற்சித்து முன்பைவிட அழகான சிலந்தி வலையைப் பின்னிக் காட்டியது.

உடைகளில் அடையாளச் சின்னமாகவும் உள்ளது.

பறவையின் கழுத்துப் பகுதியில் இறக்கைகள் தனியாக நீண்டு விளங்கும். இத்தோற்றம் பார்ப்பதற்கு, பழங்காலச் செயலாளர்கள் தூரிகைப் பேனாவோடு உலவுவது போலத் தோன்றுகிறது. எனவே இப்பறவைக்குச் 'செயலாளர் பறவை' என்னும் பெயர் வந்தது.

அறிவோம் அதிசயம்



முள்முடி மரம்!

ஆப்பிரிக்க புல்வெளியில் வளரும் அதிசய மரம் செனகல் கம் அக்கேசியா'. இதற்கு அராபியப் பசை மரம், செனகல் பசை மரம், கெர், கும்தா என்னும் பெயர்களும் உண்டு. இது இருபது மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது. பல கிளைகளுடன், நன்றாகப் படர்ந்து, வளர்ந்து, வட்ட வடிவத்துடன் காட்சி அளிக்கும். இந்த மரத்தின் நிழலில் ஒட்டகச்சிவிங்கி, காட்டெருமை, யானை மற்றும் பறவைகள் ஓய்வெடுக்கும். இதன் இலைகள் தாவர உண்ணிகளுக்கு உணவாகும்.

'செனகல் கம் அக்கேசியா' மரக் கிளைகளில் ஜோடியாக

முட்கள் காணப்படும். இலைகள் சாம்பல் கலந்த பச்சை நிறம். முள்ளின் இடைப்பட்டப் பகுதியில் மஞ்சள் நிற பூக்கள் பூக்கும். இவை தட்டையான விதைப் பெட்டிகளாக மாறுகின்றன.

இம் மரம் கடுமையான வறட்சிக் காலத்திலும் வளரக் கூடியது. மழைக் காலம் முடிந்ததும் பசையை வெளியேற்றத் தொடங்குகிறது. டிசம்பர் முதல் ஜூன் வரை எடுக்கப்படும் பசையிலிருந்து 'கம் அராபிக்' என்னும் மருந்து தயாரிக்கப்படுகிறது. இது தோல் வியாதிகள், சுவாசக் கோளாறுகள், சிறுநீரக நோய்கள், சளி, தொண்டை வியாதிகள், வயிற்றுப் போக்கு போன்றவற்றுக்குப் பயன்படுகிறது.

பைபிளில் அக்கேசியா பற்றிய குறிப்புகள் உள்ளன. மோசே என்பவர் இறைவனின் கட்டளைப்படி உடன்படிக்கைப் பேழை, அப்ப மேசை, பலிபீடம் போன்றவற்றை இம்மரத்தால் செய்தாராம். பழங்கால ஹீப்ரு மொழி பேசும் மக்கள் செனகல் கம் அக்கேசியா மரத்தைப் புனிதமாகக் கருதினர். இயேசுவின் தலையில் சூட்டப்பட்ட முள் முடியில் இருந்த முட்களும் இந்த அக்கேசிய முட்கள்தானாம்!

கார் அளவு இதயம்!



நீலத்திமிங்கலத்தின் இலத்தீன் பெயர் 'மஸ்குலஸ்'. இதன் பொருள் 'குண்டானது.'

இதுவரை மனிதர்கள் கணக்கெடுத்த நீலத்திமிங்கலத்தில், அதிக எடை கொண்டதாக 177 டன் திமிங்கலத்தைக் கண்டுபிடித்துள்ளனர். அதாவது 1 லட்சத்து 77 ஆயிரம் கிலோ ஆகும். நீலத்திமிங்கலம் குட்டி 2700 கிலோ எடை கொண்டதாக இருக்கும்.

இவற்றின் உடல் நீளமாகச் சாய்தள வடிவத்தில் உள்ளது. தலை தட்டை வடிவமாக உள்ளது. இவை நீரில் வருகின்ற அதிர்வை பன்னிரண்டு மீட்டர் கடந்து இருப்பவர்களால்கூட கண்டுகொள்ள முடியும். எடை கூடினாலும் இவற்றின் நீச்சல் வேகம் குறைவதில்லை. மணிக்கு ஐம்பது கிலோ மீட்டர் வேகத்தில் நீந்தும். இவை பெரும்பாலும் தனிமையாக வாழும் இயல்பைக் கொண்டது.

பூமியில் வாழும் விலங்குகளில் மிகப் பெரியது நீலத்திமிங்கலம்தான். இதுவரை கண்டுபிடித்த நீலத்திமிங்கலங்களில் மிகப் பெரியது 110 அடி 3 அங்குல நீளம் கொண்டதாக இருந்ததாம். நாக்கு ஒரு யானை அளவுக்கு இருக்குமாம். வாய்க்குள் ஐம்பது பேர் கூட நிற்க முடியுமாம். ஆனால், அதுக்கு முயற்சி பண்ண முடியாது.

இவற்றின் இதயம் ஒரு சிறிய கார் அளவு இருக்குமாம். நீலத்திமிங்கலத்தின் வளர்ச்சி விகிதம் ஒரு மணி நேரத்துக்கு தொண்ணூறு கிலோ எடை அதிகமாகுமாம். தன்னுடைய குட்டிக்கு ஒரு நாளைக்கு 350 முதல் 570 லிட்டர் வரை பாலூட்டுமாம்!

கோகுலம்

சிறுவர் சங்கம்

பட்டியல்



'கோகுலம் சிறுவர் சங்கம்'
பட்டியல் இந்த மாதமும் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

301) மு. ஜமுனாதேவி, ஐந்தாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, கூத்தனூர்

302) பி.பிரசாந்த், பதினொராம் வகுப்பு, புனித ஜார்ஜ் பள்ளி, நீலகிரி

303) க.காயத்ரி, ஏழாம் வகுப்பு, டி.ஏ.வி.பெல் பள்ளி, இராணிப்பேட்டை

304) பா.ஹேமந்தர், எட்டாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஆரணி

305) எம்.ஆன்ஷோஜா, முதலாம் வகுப்பு, மதர் தெரசா மெட்ரிக் மேனிலைப் பள்ளி, நெய்யூர்

306) எஸ்.சூர்யபிரசாத், முதலாம் வகுப்பு, மலர் மெட்ரிக் பள்ளி, ஆத்தூர்

307) ஓ.தேவசகாயமேரி, ஏழாம் வகுப்பு, பதிப்பக செம்மல் க.கணபதி அரசு மேனிலைப் பள்ளி, சென்னை - 24

308) பா.மந்த்ரா, ஆறாம் வகுப்பு, கோல சரஸ்வதி வைஷ்ணவ சீனியர் செகண்ட்ரி பள்ளி, சென்னை
309) வி.சிவஹரீஷ், ஆறாம் வகுப்பு, எஸ்.ஆர்.டி.யுனிவர்சல் பள்ளி, சத்தியமங்கலம்
310) ர.ராகவி, ஒன்பதாம் வகுப்பு, அரசு மகளிர் மேனிலைப் பள்ளி, ஆத்தூர்
311) என். கோகுல்ராம், ஒன்பதாம் வகுப்பு, வேதவல்லி வித்யாலயா, வாலாஜாபேட்டை
312) எம்.எஸ்.பாத்திமா, முதலாம் வகுப்பு, டானிஷ் மெட்ரிக் உயர்நிலைப் பள்ளி, சென்னை
313) பா.பரத், ஏழாம் வகுப்பு, விஸ்வ தீப்தி மெட்ரிக் உயர்நிலைப் பள்ளி, ஆத்தூர்
314) சி.மோனிஷா, எட்டாம் வகுப்பு, மூவேந்தர் உயர்நிலைப் பள்ளி, பேராவூரணி
315) ம.வ.சந்தோஷ், ஏழாம் வகுப்பு, சூரஜ் மெட்ரிக் பள்ளி, தெள்ளாறு
316) எஸ்.காயத்ரி, நான்காம் வகுப்பு, குட் ஷெப்பர்டு நர்சரி பிரைமரி, சென்னை
317) ஏ.கௌதமன், ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீமதி சுந்தரவல்லி நினைவுப் பள்ளி, சென்னை
318) த.பிரகல்யா, எட்டாம் வகுப்பு, பொன்னையா இராமஜெயம் பொதுப் பள்ளி, தஞ்சாவூர்
319) பி.பிரகதீசன், ஒன்பதாம் வகுப்பு, பாரதி வித்யாலயா மேனிலைப் பள்ளி, சேலம்
320) சு.பவ்யா, ஆறாம் வகுப்பு, லிட்டில் ஃபிளவர் கான்வென்ட், திருப்பூர்
321) சு.ஹரிணி, நான்காம் வகுப்பு, அன்னை மெட்ரிக் பள்ளி, திருப்பூர்
322) து.விஜயராகவன், ஒன்பதாம் வகுப்பு, வேதலோக வித்யாலயா, நாமக்கல்
323) சு.சுவாதி, ஐந்தாம் வகுப்பு, திருகுடும்ப மேனிலைப் பள்ளி, சென்னை
324) சு.விக்னேஷ், ஒன்பதாம் வகுப்பு, திருகுடும்ப மேனிலைப் பள்ளி, சென்னை



325) ஏ. சாந்தி, பத்தாம் வகுப்பு, ஏ.பி.சி. வீரபாகு மெட்ரிக் மேனிலைப் பள்ளி, தூத்துக்குடி
326) ஜெ. ஸ்ரீராம் கௌதம், ஒன்பதாம் வகுப்பு, சி.எஸ்.ஆர்.மேனிலைப் பள்ளி, மதுரை
327) வி. ராஜா, எட்டாம் வகுப்பு, விவேகானந்தா மெட்ரிக் மேனிலைப் பள்ளி, சீர்காழி
328) சொ.ஜோதிலெட்சுமி, பத்தாம் வகுப்பு, ஸ்ரீஉலகா மேனிலைப் பள்ளி, கடையநல்லூர்
329) வெ.வேதநாராயணன், ஏழாம் வகுப்பு, இ.ரெ.மேனிலைப் பள்ளி, திருச்சி
330) ஸ்ரீ பத்மஸ்ரீ, எட்டாம் வகுப்பு, ரோஸினி மெட்ரிக் பள்ளி, சென்னை



331) த.க.தமிழ்பாரதன், ஏழாம் வகுப்பு, வ.சோ.ஆண்கள் மேனிலைப் பள்ளி, திருவாரூர்

332) த.க.தமிழ்பாரதி, ஏழாம் வகுப்பு, ரோஸினி மெட்ரிக் மேனிலைப் பள்ளி, திருச்சி

333) டி.டி.எஸ்.தரணிகர், நான்காம் வகுப்பு, ஸ்ரீமஹரிஷி வித்யா மந்திர், திண்டுக்கல்

334) டி.வந்தனா தேவி, நான்காம் வகுப்பு, ஜெய்ஹிந்த் மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை

335) ச.முஹம்மது பைசல், ஒன்பதாம் வகுப்பு, அல்-அமீன் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, கும்பகோணம்

336) பி.சரஸ்வதி, ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, கும்மிடிப்பூண்டி

337) ச.கருப்பையா, பன்னிரண்டாம் வகுப்பு, இராமநாதன் செட்டியார் மேனிலைப் பள்ளி, விராச்சிலை

338) அ.க.சாயீசுதா, ஒன்பதாம் வகுப்பு, பெண்கள் மேனிலைப் பள்ளி, ஸ்ரீரங்கம்

339) சொ.அ.லோகேஷ், ஒன்பதாம் வகுப்பு, ஜி.டி.மெட்ரிக் மேனிலைப் பள்ளி, கோயமுத்தூர்

340) மோ.வனிதா, ஐந்தாம் வகுப்பு, இன்ஃபேண்ட் மெட்ரிக் பள்ளி, விருத்தாசலம்

341) ஆர்.பரதன், ஏழாம் வகுப்பு, காமராஜர் முனிசிபாலிடி ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, விழுப்புரம்

342) எல். லூர்து பாக்கிய நான்ஸி, ஆறாம் வகுப்பு, புனித அந்தோணியார் நடுநிலைப் பள்ளி, பெரியசாமிபுரம்

343) சி.தனுஷ் ஆதித்யா, மூன்றாம் வகுப்பு, பாரதிய வித்யாபவன் மேனிலைப் பள்ளி, கோவை

344) ச.சந்தானலெட்சுமி, ஒன்பதாம் வகுப்பு, குருகுலம் பள்ளி, மதுரை

345) எஸ்.வசீகரன், எட்டாம் வகுப்பு, புனித சவேரியார் மேனிலைப் பள்ளி, ஓரடியம்புலம்

346) தி.மதுப்ரீத்தா, ஐந்தாம் வகுப்பு, ஆர்.கே.வி.மெட்ரிகுலேஷன் மேனிலைப் பள்ளி, கோயம்புத்தூர்

347) மு.வைஷ்ணவி, முதலாம் வகுப்பு, மேரி இமாகுலேட் மெட்ரிக் பள்ளி, மதுரை.

348) ப.ம.சிவசூர்யா, நான்காம் வகுப்பு, இராஜேந்திரன் மெட்ரிக் ஹையர் செகண்டரி பள்ளி, பொரசப்பாளையம்,

349) மு.இராகவிலாசினி, எட்டாம் வகுப்பு, டி.வி.எஸ்.மேனிலைப் பள்ளி, மதுரை

350) ஆர்.ப்ரியதர்ஷன், ஏழாம் வகுப்பு, தேவசகாயம் மேனிலைப் பள்ளி, மதுரை

நந்துவின் சதி!

புலேந்திரன்

செங்கோட்டை மலையில், குண்டாற்றுக்குத் தெற்குப் பக்கம் உள்ள காட்டில் புலிகள் அதிமாக இருந்தது. அந்தப் புலிக் கூட்டத்துக்கு வீரன் தலைவனாக இருந்தது.

அங்கே இருந்த காட்டு எருமைகள், வீரனுக்கு அடங்கி, அது சொல்லும் பணிகளைச் செய்து வந்தன.

குண்டாற்றுக்கு வடக்குப் பக்கம் உள்ள காட்டில் யானைகள் அதிகம். அங்கே மலையன் என்ற யானை தலைவனாக இருந்தது. அந்தக் காட்டில் வெற்றிடமாக இருந்த ஓர் இடத்தைச் சமன் செய்து உழுது, கரும்பு பயிரிட்டது மலையன். கரும்புகள் செழித்து வளர்ந்து, கண்ணுக்கு அழகாகத் தோற்றமளித்தன.

தெற்குக் காட்டைச் சேர்ந்த நரி நந்து, வடக்குக் காட்டுக்குப் போவதற்காக ஆற்றைக் கடந்துகொண்டிருந்தது.

அது, முன்பு ஒருமுறை அம்மாதிரி திருட்டுத்தனமாக அந்தக் காட்டுக்குள் நுழைந்து, தனியே மேய்ந்து கொண்டிருந்த ஓர் ஆட்டுக் குட்டியைத் தூக்கிக்கொண்டு வேகமாகப் போனது. அந்தப் பக்கமாக வந்த மலையன், ''அடே...திருட்டுப் பயலே!'' என்று ஓடி வரவும், ஆட்டுக்குட்டியை விட்டுவிட்டு தப்பித்தால் போதும் என்று நந்து ஓடி விட்டது.

'கிடைத்த இரையை மலையனால் இழக்கும்படி ஆயிற்றே' என்று வருந்திய நரி, அது முதல் மலையனை எதிரியாக நினைத்தது. மலையனுக்கு எப்படியாவது கேடு விளைவிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணம் நந்துவுக்கு இருந்து வந்தது. இப்போது ஆற்றைக் கடந்து காட்டுக்குள் நடந்தது. சற்று தூரம் சென்றதும், கரும்புக் கொல்லையைப் பார்த்தது நரி.

'இது...மலையனின் இடமாயிற்றே. நமக்கு ஆட்டு இரை



உருவகக் கதை

கிடைக்காமல் தடுத்தவனுக்கு இப்படி கொழு கொழு கரும்பா...? கூடவே கூடாது! எப்படியாவது கரும்புகளை அழித்துவிட வேண்டும்' என்று எண்ணி, உடனே தெற்குக் காட்டுக்குத் திரும்பியது.

'எப்படி அழிப்பது...? நமக்கு அந்த அளவுக்குச் சக்தி இல்லையே...' என்று சிந்தித்தபடியே நடந்துகொண்டிருந்தது.

எதிரில் வந்த வீரன், ''என்ன... பலத்த சிந்தனை?'' என்று கேட்டது.

வீரனைப் பார்த்த நரியின் முகத்தில் 'பளிச்'சென ஒளி! உடனே திட்டம் உதித்துவிட்டது.

''வீரரே...! உங்களைத் தேடித்தான் வந்துகொண்டிருக்கிறேன்.''

''ஏன்?'' என்று கேட்டது, வீரன்.

''வடக்குக் காட்டில் வசிக்கும் என் உறவினரைப் பார்த்து வரச் சென்றேன். வழியில், மலையனின் கரும்புத் தோட்டம் கண்ணில் பட்டது. அழகாக இருந்ததால் அதைப் பார்த்துக்கொண்டு சற்றே நின்றேன். அப்போது அங்கே வந்த மலையன், 'தெற்குக் காட்டைச் சேர்ந்த



எவரும் இங்கே வரக்கூடாது. வந்தால் மிதித்துக் கொன்றுவிடுவேன்' என்றான். 'நான், வீரனிடம் சொல்வேன்' என்றேன். 'அவன் என்னடா பெரிய வீரன். தைரியம் இருந்தால் என்னுடன் மோதிப் பார்க்கச் சொல்; தூக்கி வீசிடுவேன்' என்றான். பயந்துவிட்டேன். இப்போது அங்கிருந்துதான் வந்துகொண்டிருக்கிறேன்'' என்றது.

நந்து சொன்னதைக் கேட்ட வீரன் கோபத்துடன், ''யார், அங்கே?'' என்றான்.

வீரனின் குரல் கேட்டு, காட்டு எருமைகள் ஓடி வந்தன.

''உடனே வடக்குக் காட்டுக்குச் சென்று, மலையனின் கரும்புத் தோட்டத்தை அழித்துவிட்டு, அவனையும் இழுத்து வாருங்கள்'' என்றது, வீரன்.

அங்கே -

மலையன், எங்கோ சென்றிருந்தது. குட்டி யானை, கரும்புக்குக் காவலாக இருந்தது. காட்டெருமைகள், கரும்புத் தோட்டத்தில் புகுந்து அழிக்கத் தொடங்கின. அதைப் பார்த்த குட்டி யானை, ''அழிக்காதீங்க...'' என்று சத்தம் போட்டது.

''மலையன் எங்க தலைவனைப் பழித்துப் பேசினானாம். அதன் விளைவுதான் இது. மலையனை இழுத்து வரும்படி தலைவர் சொன்னார். அவன் இங்கே இல்லாததால் தப்பித்தான்'' என்று சொல்லிவிட்டு, கரும்புகளை அழித்து விட்டுச் சென்றன.

சற்று நேரத்தில் திரும்பி வந்த மலையன், குட்டி யானை சொன்னதைக் கேட்டு, திகைத்துவிட்டது. தான் வளர்த்த அழகான கரும்புகள் அழிந்து கிடப்பதைப் பார்த்ததும் ஆத்திரம் வந்தது. கோபப்பட்ட மனத்தை அடக்கிக் கொண்டு, நிதானமாக தெற்குக் காட்டை நோக்கி நடந்தது, மலையன்.

''தலைவரே! நாங்களும் வருகிறோம். அந்த வீரனுக்குச் சரியான பாடம் புகட்டிவிட்டு வருவோம்'' என்று மற்ற யானைகளும் புறப்பட்டன.

''வேண்டாம்! அந்த வீரனைப் போல் நாமும் நடந்துகொள்ளக்கூடாது. நீங்கள் இங்கேயே இருங்கள்'' என்று சொல்லிவிட்டது, மலையன்.

தெற்குக் காட்டில்...



ஒரு பாறையின் மீது கம்பீரமாக உட்கார்ந்திருந்தது வீரன். அதனைச் சுற்றி புலிகளும், காட்டெருமைகளும் இருந்தன.

வீரனின் முன்னால் வந்து நின்று, ''வீரரே! நான் பாடுபட்டு வளர்த்த கரும்புகளை உங்களால் அனுப்பப் பட்ட எருமைகள் அழித்துவிட்டு வந்துள்ளன. நான் உங்களுக்கு எதிராக எந்தக் குற்றமும் இழைத்ததில்லை. என் மீது உங்களுக்கு அப்படி கோபம் வரக் காரணம் என்னவென்று தெரிந்து போகத்தான் இங்கே வந்தேன்'' என்றது மலையன்.

''நீ என்னைத் தூக்கி வீசி விடுவதாகச் சொன்னதால்தான் அப்படிச் செய்யச் சொன்னேன்'' என்றது வீரன்.

''நான் அப்படிச் சொன்னதாக உங்களிடம் சொன்னது யார்? கூப்பிட்டு விசாரியுங்கள்; உண்மை தெரியும்?'' என்றது, மலையன்.

வீரன், நரியின் பக்கம் திரும்பிப் பார்த்தது.

'ஆகா... ஆபத்து! தப்பித்துவிட வேண்டும்' என்று எண்ணிய நரி, மெல்ல நழுவி, புதரின் மறைவில் போய்க்கொண்டிருந்தது.

'ஓ... இது நரியின் சூழ்ச்சி!' என்று புரிந்துகொண்டது வீரன். நரியை சிறையில் அடைக்க உத்தரவிட்டது.

பிறகு, ''மலையா! நரி சொன்னதைக் கேட்டு அவசரப்பட்டு உனக்குத் தீங்கிழைத்துவிட்டதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். உனக்கு ஏற்பட்டுள்ள இழப்பை நானே ஈடு செய்வேன்...'' என்று சொல்லி, மலையனின் துதிக்கையை அன்புடன் பற்றிய வீரன், ''நாம் என்றும் நண்பர்களாக இருப்போம்'' என்றது. மலையனும் மன்னித்தது. பிறகு அவை நண்பர்களாக வாழ்ந்தன. ∩

வின்னர்ஸ்!

விடையைச் சொல்; பரிசை வெல் - 6ல் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானோர் சரியான விடைகளை எழுதியிருந்தார்கள். அவர்களில் குலுக்கல் மூலம் பத்து குட்டீஸ்களுக்கு தலா ரூ.100/- வழங்கப்படுகிறது.

சரியான விடைகள்:

1. தேக்கு மரம், 2. ஆல்பர்ட்,



3. 3,78,000 சதுர கி.மீ. 4. டிசம்பர் 10, 5. யானைக்கு உடல் குணமாக வேண்டும்.

பரிசு பெறுவோர்:

1.ஏ.சிவக்குமார் - சின்ன காஞ்சிபுரம்
2. எஸ்.நந்தினி - சென்னை
3. த.க.தமிழ்பாரதி - திருவாரூர்
4. எஸ்.கோகுல்ராம் - வாலாஜாபேட்டை
5. க.பாரதி - புதுக்கோட்டை
6. எஸ்.ஹரிகுமார் - கும்பகோணம்
7. ஆர்.பிரியங்கா - வத்தலக்குண்டு
8. கோ.இராகுல்வாசன் - சென்னை
9. கே.வெங்கடலட்சுமி - திருநெல்வேலி
10. ஸ்ரீஷாலினி - பம்மல்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்; கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி!

குட்டீஸ் கோகுலம்

வண்ணம் தீட்டுங்கள்!



உங்கள் கைவண்ணத்தால்
இங்குள்ள படத்தை
வண்ணம் தீட்டி அழகுபடுத்துங்க
குட்டீஸ்!



தீபக் ஆறாம் வகுப்பு படிப்பவன். ஒருநாள் காலை கடவுளிடம், ''கடவுளே எனக்காக மும்பையை இந்தியாவின் தலைநகரமாக மாற்று'' என்று வேண்டினான். அவனுடைய அம்மா ''ஏன் அப்படி வேண்டி

தலைநகரம்!

→

எறும்பில் மட்டும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட வகைகள் உண்டு. கறுப்பு, பழுப்பு நிற எறும்புகள் மட்டுமல்லாது பச்சை, மஞ்சள், ஊதா நிறங்களிலும் எறும்புகள் உண்டு.

✪ பெரிய எறும்புகள் ஒரங்குலத்துக்கும் (2.5 செ.மீ) அதிகமாக வளரக் கூடியவை. மிகச் சிறிய எறும்பின் நீளம் ஒரு மில்லி மீட்டர்.

✪ எறும்பு தன் எடையைப் போல் பத்து மடங்கு எடையுள்ள பொருளைத் தூக்கக் கூடிய ஆற்றல் படைத்தது. இவை உலகெங்கும் காணப்பட்டாலும், பொதுவாக வெப்பப் பிரதேசங்களில்தாம் அதிகமாக உள்ளன. தாவரம் மற்றும் விலங்கினப் பொருட்களை உண்கின்றன.

✪ எறும்புகளைச் 'சமுதாயப் பூச்சிகள்' என்று சொல்கிறார்கள். அதன் புற்றுகள் 'காலனி' என அழைக்கப்படுகிறது.

✪ எறும்புகளில் மூன்று சாதிகள் உண்டு. ராணி எறும்பு, ஆண் எறும்பு, பணியாள் எறும்பு! தரைக்கு அடியில் 12 மீ (40 அடி) ஆழம் வரை எறும்புகள் காலனி அமைக்கின்றன.

✪ நிலத்தடியில் புற்று கட்டுவதன் மூலம், மண்ணை இளகச் செய்து விவசாயத்துக்கு உதவுகிறது.

- க.ஆர்த்தி, உறுப்பினர் எண்: 48,
எட்டாம் வகுப்பு, சின்மயா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, இராஜபாளையம்



எறும்பு!

னாய்?'' என்று கேட்டார்.

''நேற்று நடந்த தேர்வில் இந்தியாவின் தலைநகரம் மும்பை என்று எழுதிவிட்டேன். அதனால் அப்படி வேண்டினேன்'' என்றான்.

அதற்கு தீபக்கின் அம்மா, ''நல்ல மதிப்பெண்களை பெற நன்கு படிக்க வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும். தவறினால், கடவுள் என்ன செய்வார்? ஆகவே, கடவுள்கிட்ட இதைச் செய், அதைச் செய்ன்னு தொந்தரவு செய்யாதே'' என்றார்.

- ஆர்.மதிவதனா,
உறுப்பினர் எண்: 253,
ஏழாம் வகுப்பு, பி.எஸ்.சி. பள்ளி,
விருதுநகர்

கல...கல...

பரமேஸ்: ஏண்டா மருந்து குடிக்கறப்ப சட்டையைப் போட்டு குடிக்கிறே?

சந்திரன்: டாக்டர் மருந்தை வெறும் வயித்துல குடிக்கக் கூடாதுன்னு சொன்னார்.

- ச.துசிகரன்,
உறுப்பினர் எண்: 103,
எட்டாம் வகுப்பு,
புனித மிக்கேல் கல்லூரி,
மட்டக்களப்பு



''என்னடா கணக்குல புலின்னு சொன்னே, பத்தே மார்க் எடுத்திருக்கே?''

''புலி இப்ப பதுங்கியிருக்குப்பா!''

- ஆ.மகாலட்சுமி,
உறுப்பினர் எண்: 269,
மூன்றாம் வகுப்பு,
ஊ.ஒ.துவக்கப் பள்ளி, காயக்காடு

1. குழந்தைகள் விரும்பும் 'தை' ☐☐
2. மழைக்கும் பிடிக்கும் 'டை' ☐☐
3. கோழி போடும் 'டை' ☐☐☐
4. உரலில் இடிக்கும் 'கை' ☐☐☐☐
5. எழுத உதவும் 'கை' ☐☐
6. நோயை உண்டாக்கும் 'பை' ☐☐☐

- கோ.பிரவீண்குமார், உறுப்பினர் எண்: 18,
ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி வித்யாலயா பள்ளி, விழுப்புரம்



விடுகதைகள்!

1) பச்சை பட்டாடை; சிவப்பு முந்தானை - அது என்ன?

2) தாய் சதுரம்; பிள்ளைகள் அறுகோணம்! - அது என்ன?

3)மஞ்சள் யானை ஒன்று நஞ்சையில் படுத்திருக்கு - அது என்ன?

4. நீல நிறப் புடைவையில் நிறைய நிறையப் பூக்கள்! - அது என்ன?

5. பேசாத கறுப்பனிடம் பேசிடுவான் வெள்ளையன்! - அது என்ன?

- ஆர்.ஜி. காயத்ரி, உறுப்பினர் எண்: 2, பதினொராம் வகுப்பு, உலக மீட்பர் பள்ளி, திசையன்விளை

பெயர்கள் என்ன?

கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு 'ரு'வில் முடியும் சொற்களைக் கண்டுபிடியுங்கள்.

1. இந்தியாவின் முதல் பிரதமர்
2. இமயமலையின் மறுபெயர்
3. குட்டியை மடியில் சுமக்கும் விலங்கு
4. ஆசிரியரை இப்படியும் அழைக்கலாம்
5. கர்நாடக மாநிலத்தின் தலைநகர்
6. மரத்தின் மறுபெயர்

- நா. வருண், உறுப்பினர் எண்: 1, எட்டாம் வகுப்பு, அழகப்பா மெட்ரிக் மேனிலைப் பள்ளி, காரைக்குடி





விடைகள்!

கண்டுபிடி! கண்டுபிடி!

1. கதை, 2.குடை,
3. முட்டை, 4. உலக்கை,
5. பலகை, 6, குப்பை

விடுகதைகள்:

1) கிளி 2) தீப்பெட்டி
3) வைக்கோல் போர்
4) வானம், விண்மீன்கள்
5) கரும்பலகை, சாக்பீஸ்

பெயர்கள் என்ன?

1. நேரு, 2. மேரு, 3.கங்காரு,
4. குரு, 5. பெங்களூரு, 6. தரு,

யாளித் தீவு!

ரேவதி

சரக்கு விமானம் முழுவேகத்தில் பறந்து கொண்டிருந்தது. பாலாஜி பந்துலுதான் ஓட்டிக் கொண்டிருந்தார். அவருக்கு அருகே சரவணன் ரிமோட் கண்ட்ரோலின் கரகர ஒலியை அடக்க முயன்று கொண்டிருந்தார்.

சரக்குப் பெட்டக அறையிலிருந்து இலேசாக எழுந்த வாசனை அவரை பரபரப்படையச் செய்தது.

'இந்தப் பசங்க இப்பவே பலகாரப் பொட்டலத்தைப் பிரிச்சிட்டாங்க போலிருக்கே?' என்று மனதில் எண்ணியபடி வேகமாகக் கேபின் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார் சரவணன்.

சரக்குப் பெட்டகக் கூடத்துக்கு வெளியே சேகரும் முத்துவும் அமைதியாக சதுரங்கம் ஆடிக் கொண் டிருந்த காட்சி சரவணனுக்கு ஏமாற்றத் தைக் கொடுத்தது. அவரைக் கண்டதும் இருவரும் மரியாதை நிமித்தம் எழுந்து, ''என்ன சார்?'' என்றனர்.

''ஏண்டா, என்னமோ வாசனை வரலே?'' என்று அவர் கேட்கவும், ''சரி தான்! நீங்களும்



பந்துலு சாரும்தான் மசால் வடை சாப்பிடறீங்க, எங்களுக்கும் தருவீங்கன்னு நினைச்சிட்டிருக்கோம்'' என்றான் சேகர்.

'இவர்களும் சாப்பிடலே. அப்போ மசால் வடை வாசனை விமானத்தில் அதுவும் பைலட் கேபின்ல எப்படி வருது?'

சரவணன் சரக்கு விமானத் தலைமையகத்தோடு தொடர்புகொண்டு மசால் வடை வாசனையைப் பற்றிப் புகார் செய்தார்.

''விமானம் நேற்றுத்தான் நைரோபிலே மருந்துகளை இறக்கிவிட்டு சென்னை வந்தது. பைலட் முனீஷ்பாபு விமானத்தில் எலியிருக்குன்னு புகார் செய்தார். மருந்தடிக்கக்கூட நேரமில்லை. உடனே முதலுதவி மருந்துகளை எடுத்துக்கொண்டு இந்தோனேஷியா கிளம்பச் சொல்லிட்டாங்க. அதனால மசால் வடையோட எலிக்கூண்டு வைச்சிருக்கோம். அதை உங்ககிட்ட சொல்லலை போலிருக்கு'' என்று பதில் வந்தது.

'சொல்லியிருந்தால் பந்துலு வந்திருக்கவே மாட்டார். எலின்னால் அவர் ஓடியே போயிடுவார். விமானம் ஜகார்த்தா வரை போயாகணும். எப்போ இப்படி வாசனை வருதோ ஏதோ எலி பொறியில் சிக்கி வடையைக் கடித்திருக்க வேண்டும். முழுவடை இப்படி மணக்காது. விஷயம் தெரிந்தால், பந்துலு கீழே குதித்தாலும் குதித்துவிடுவார். ஜகார்த்தா போய்ச் சேரும்வரை கவனமாக இருந்தாக வேண்டும்' என நினைத்தார் சரவணன்.

நேரம் சென்றுகொண்டே இருந்தது. நள்ளிரவு. விமானம் கடல்பரப்புக்கு மேல் பல ஆயிரம் அடி உயரத்தில் முழு வேகத்தில் பறந்து கொண்டிருந்தது.

நெடுங்கதை

சரவணன் எதற்காகப் பயந்து கொண்டிருந்தாரோ அது கடைசியில் நடந்தேவிட்டது.

பைலட்டின் அறையில் அமைந்திருந்த இரு சீட்களில் ஒன்றில்தான் பந்துலு அமர்ந்து விமானத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார். இன்னொன்றில் சரவணன். என்னவோ குறுகுறு உணர்வு ஏற்பட சற்றுத் தள்ளிப் பார்வையைச் செலுத்தினார் பந்துலு. அவரது சீட் அருகே டிஷ்போர்டில் ஒரு சுண்டெலி!

அவ்வளவுதான்! பந்துலு நிலை குலைந்தார். என்ன பணியில் இருக்கிறோம் என்ற நினைப்பு முற்றிலுமாக மறந்துபோயிற்று. 'ஊ...ய்...ய்!'' என்று கத்தினார். விமானம் பயங்கரமாகக் குலுங்கியது. கீழ் நோக்கித் தள்ளாடத் தொடங்கியது.

சரவணன் நிலைமையைச் சரிசெய்ய முயன்றார். ஆனால், அவரது முயற்சிகள் எதுவும், பயனளிக்கவில்லை. விமானம் தாறுமாறாகக் குலுங்கி சத்தம் எழுப்பியபடி, கீழே இறங்க ஆரம்பித்தது. நால்வரும் நிலை குலைந்து தலைகீழாகப் புரண்டனர். முத்துவும் சேகரும் சஷ்டி கவசம் சொல்லத் தொடங்கி குழறினர். விமானம் இறங்க உள்ள இடம் பூமியோ, மலையுச்சியோ, நதியோ, நடுக்கடலோ என்று மனத்தில் எழுந்த திகில் ஒவ்வொருவரையும் ஆட்டிப் புரட்ட, மயங்கிச் சாய்ந்தனர்.

அடிபட்டு விழுந்த அதிர்ச்சியில் நால்வரும் மயங்கிக் கிடந்தனர். காலை

யில் முதலில் எழுந்தவர்கள் சேகரும் முத்துவும்தான். அருகே சரவணன். மண்டையில் இலேசான அடி. இரத்தம் கசிந்து உறைந்திருந்தது. பந்துலு பைலட் காபினில் தலைகுப்புறக் கிடந்தார். கழுத்தில் என்னவோ குத்தி வீங்கியிருந்தது. வெளியே வெயில் 'சுரீ'ரென்று உறைந்தது.

சற்றுத் தொலைவில் காட்சிப் பொருளாக அலையடித்தபடி நீண்டு கிடந்தது நீலக்கடல். தண்ணீர் பாட்டிலிலிருந்து பந்துலு, சரவணன் முகத்தில் தண்ணீரை அடித்தனர் முத்துவும் சேகரும். இருவரும் கண் விழித்துப் பார்த்தனர்.

பந்துலு குற்ற உணர்வோடு தலை கவிழ, ''இந்தவரை உயிருக்குப் பாதிப்பில்லாம நாலு பேரும் தப்பினோம். பார்க்கும்போது விமானத்துக்கும் சரக்குக்கும் அதிக சேதமிருக்காதுன்னு தோணுது. பிள்ளையார்தான் காப்பாற்றியிருக்கார்'' என்றார் சரவணன்.

''பிள்ளையார் வேண்டாம். அவருக்கு எலி வாகனம். சார் ஓடிடப் போறார். வேற சாமியைக் கூப்பிடுங்க'' என்றான் சேகர்.

''சரி! சரி! இது எந்த நாடுன்னு தெரியலே, ரேடியோ கண்ட்ரோல் சேதமில்லாம இருக்கான்னு பார்த்து, தலைமையிடத்துக்குச் செய்தியனுப்பணும். நீங்க அதைக் கவனிங்க. நாங்க போய் இது என்ன தீவுன்னு பார்த்துட்டு வரோம்'' என்றார் சரவணன்.

''ஐயோ சரவணன், நானே இவங்களோட போறேன். கண்ட்ரோல் சமாசாரத்தை நீங்க கவனிங்க. அங்கே எலியிருக்கு'' என்று அலறினார் பந்துலு. எல்லோரும் சிரித்தனர்.

சரவணன் சரிந்து கிடந்த விமானத்துக்குள் செல்ல, மூவரும் கடல் நோக்கி நடந்தனர். தொலைவில் கடற்கரையில் கட்டுமர வரிசையாகத் தோன்றியவை எல்லாம் நெருங்கியதும் கடல் முதலைகள் என்பது தெரிந்தது. அவை அடிக்கடி கொட்டாவி விடுவதுபோல் வாயை பயங்கரமாகத் திறந்து பல்வரிசை தெரிய மூடியபோது, மூவர் உடம்பும் நடுங்கியது.

''சார், இது முதலைத் தீவு போல் இருக்கு'' என்று நடுங்கினான் சேகர்.

''ஆமாம்! அங்கே வேண்டாம். இப்படி வலப் பக்கம் மேட்டுல போய் மனிதர்கள் இருக்காங்களான்னு பார்ப்போம்'' என்றார் பந்துலு. மூவரும் மேட்டில் ஏறிப் பார்த்தனர்.

தீவின் பசுமை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அடர்ந்த தென்னை வரிசைக்குப் பின்னால் பெரிய குன்று. அதிலும் பசுமை குலுங்கியது. ஆனால், மனிதர்கள் வசிப்பதாகத் தோன்றவில்லை. திடீரென்று யானைகள் வெறித்தனமாக ஒன்று சேர்ந்து பிளிறுவது போன்ற கர்ணகடூரமான சத்தம் எழுந்தது. கேட்கும்போதே அது உடம்பின் எலும்புகள் வரை ஊடுருவி இனந்தெரியாத பீதியை ஏற்படுத்தியது. பூமியும் அதிர்ந்தது.

திடீரென முத்து ''சார், அங்கே பாருங்க'' என்று பயத்தால் வாய் குழற அலறினான்.

சிங்கம் போன்ற வலுவான கால்கள்.

''இதுங்க யாளிங்கடா. யானையையே துதிக்கையால் தூக்கியெறியும் வலிமையுள்ளவை''



நீண்ட உடல், பிடரித்தலை, கிரிக்கெட் பந்தைத் திணித்தது போன்ற பிதுங்கிய கண்கள், முதலைகளின் வாயில் உள்ளவைபோல் தாடையின் கீழ்ப் பகுதியில் கூர்மையான பெரிய சோழிப்பல் வரிசை, யானைக்கு உள்ளதுபோல் மூக்குப் பகுதியிலிருந்து தொடங்கி நீளமாகத் தொங்கிய வலுவான துதிக்கை, விரிந்த கைகளில் கூர்மையான விரல்களோடு கத்திபோல் நீண்டு கிழிக்கத் தயார் நிலையில் விரல்கள். இந்த நடுங்க வைக்கும் கோர உருவோடு கும்பல் கும்பலாக ஓடின அந்த விலங்குகள்.

''முத்து, இதுங்க யாளிங்கடா. யானையையே துதிக்கையால் தூக்கி யெறியும் வலிமையுள்ளவை. கோயில் தூண்களில் பார்த்திருக்கேன். எங்க ஊர் பெருமாள் கோயில் திருவிழாவில் ஏழாம் நாள் யாளி வாகனத்தில் சாமி வீதிவலம் வரும். எல்லாம் கற்பனையில் செஞ்சவைன்னு நினைச்சிருந்தேன். இப்போ உயிரோட பார்க்கிறேன். இது நம்மை என்ன செய்யுமோ?'' என்று நடுங்கினான் சேகர்.

யாளிகளின் வருகையை உணர்ந்தவைபோல் முதலைகளிடம் பரபரப்புத் தோன்றியது. யாளிகள் பயங்கரப் பிளிறலுடன் முதலைகள் மேல் பாய்ந்தன. முழுத் தேங்காயை யானைகள் வாய்க்குள் திணித்துக் கொள்வது போல் யாளிகள், முதலைகளை துதிக்கையால் சுற்றி வளைத்து வாய்க்குள் திணித்து மென்று சுவைத்தன. மூவருக்கும் உடம்பு நடுங்கியது.

''இதுங்க நம்மிடம்தான் வரும். அதற்குள் ஓடிப்போய் விமானத்துக்குள் புகுந்துகொண்டால் தப்பிக்கலாம்''



''முதலைகள் முடிந்ததும் இதுங்க நம்மிடம்தான் வரும். அதற்குள் ஓடிப் போய் விமானத்துக்குள் புகுந்து கொண்டால் தப்பிக்கலாம், ஓடி வாங்க!'' என்றார் பந்துலு. மூவரும் மரண பயத்தோடு உயிரைக் காத்துக் கொள்ளும் வெறியில் காற்றாக ஓடினர்.

அவர்கள் நிலையை அறியாத சரவணன், ''மெதுவா வாங்க. விட்டுட்டுப் போயிட மாட்டேன். கண்ட்ரோல் சிஸ்டம் வேலை செய்யுது. நாம இருப்பது இந்தோனேஷியாவின் தீவுகளில் ஒன்றில். இன்னும் நான்கே மணிநேரத்தில் நம்மை அழைத்துப் போக ஹெலிகாப்டர் வந்துடும்'' என்று சொல்லிக் கொண்டே போனார்.

புயல் வேகத்தில் ஓடிவந்த சேகர், முத்து அவரை முந்திக்கொண்டு விமானத்தில் ஏறினர். சரவணனை இழுத்துக் கொண்டு பந்துலுவும் உள்ளே வந்து தானியங்கிக் கதவை மூடினார். கண்ணாடி சன்னல்கள் வழியாக யாளிகளின் கடும் தாக்குதலைக் காண முடிந்தது. அவை துதிக்கையைச் சுருட்டி குத்திய போது விமானம் குலுங்கியது. முட்டிய போது எங்கே விமானம் தலைகீழாகப் புரண்டுவிடுமோ என்றுகூட நடுங்கினர். தாக்குதல் தொடர்ந்தது. ஹெலிகாப்டர் வரும்வரை உயிரோடு இருப்போமா என்ற சந்தேகம்கூட எழுந்தது.

பைலட் அறை நொறுங்கும் நிலைக்கு வந்துவிட்டது. பெரிய யாளி



ஒன்று முரட்டுத்தனமாக மோதி இடித்ததில், கண்ணாடி பொத்துக்கொண்டு கழன்றுவிட, அந்த இடைவெளி வழியாக யாளியின் வலுவான துதிக்கை உள்ளே சுழன்று சிக்கியதையெல்லாம் இழுக்க ஆரம்பித்துவிட்டது. இன்னொன்று, தன் தலையையே உள்ளே துருத்தி, பலத்த பிளிறலோடு விமானியின் இருக்கையை இழுத்தது. நால்வரும் சரக்குப் பெட்டக அறைக்குள் ஓடி, பார்சல் பெட்டிகளின் மறைவில் பதுங்கினர். ஒரு முரட்டு யாளி சரக்குப் பெட்டக அறைக்குள் துதிக்கையை நுழைத்து சுழற்றியபோது சேகரின் வலதுகால் சிக்கிக்கொண்டது. யாளி இரும்புப் பிடியாக இழுக்க அவன் கதறத் தொடங்கினான்.

'மொளுக்'கென்று ஒரு சத்தம். பைலட் அறைக் கதவு கழன்று தொங்கியது. அது வழியாக ஒரு கூட்டமே உள்ளே வந்துவிட்டது. வெளியே இருந்தவையும் உள்ளே நுழையத் துடித்தன. கூட்டத்தின் தலைவனாகத் தோன்றிய மிகப் பெரிய உருவமுடைய யாளி, விமானியின் 'மெத்' மெத்தென்ற இருக்கையை அப்படியே தூக்கியது. அதற்குக் கீழே தான் சுண்டெலிக் குட்டிகள் இருந்தன. மேல் பக்கம் தூக்கிவிட, மொலுமொலுவென எழுந்த சுண்டெலிக் கூட்டம் சுழன்று வந்த யாளியின் துதிக்கையைப் பற்றிக் கொண்டன. சில துதிக்கைக்குள் வேகமாக ஊடுருவிச் செல்ல முயன்றன. அவ்வளவுதான்! தலைவன் யாளி வேகமாகப் பிளிறியபடி துதிக்கையை விடுவித்துக்கொள்ள முயன்றது. இதற்குள்

துதிக்கைக்குள் ஏற்கெனவே ஊடுருவியிருந்த சுண்டெலி மேலும் முன்னேறியது. யாளியால் அதற்கு மேல் தாங்கமுடியவில்லை. ஒரே பாய்ச்சலில் எல்லாவற்றையும் தள்ளி இடித்துக்கொண்டு வெளியே வந்து துதிக்கையைத் தூக்கித் தரையில் அடித்தது. உள்ளே புகுந்திருந்த சுண்டெலிகள் நீண்ட போராட்டத்துக்குப் பிறகே வெளியே வந்துவிழுந்து ஓடின. அவ்வளவுதான்! எங்கே அவை தங்கள் துதிக்கைக்குள் புகுந்துகொண்டு விடுமோ என்ற பீதியில், துதிக்கையைத் தூக்கிப் பிளிறியபடி எல்லா யாளிகளும் ஒன்றன்பின் ஒன்றாக ஓடி மறைந்தன.

சேகருக்கு எல்லாம் புரிந்துவிட்டது. ''சார், யாளிங்க இப்போதைக்கு நாம் இருக்கும் பக்கம்கூட வராது. அவைகளுக்கு சுண்டெலி என்றால் படுபயம். நம்மூர் யானைகளும் சுண்டெலியைக் கண்டால் பயப்படும்னு கேள்விப்பட்டதுண்டு. யாளிகளும், துதிக்கை வழியாகத்தானே மூச்சு விடுகின்றன? சுண்டெலிகள் இருக்கும்வரை யாளிகளைப் பற்றிய பயமே வேண்டாம்'' என்றான்.


''வாழ்க சுண்டெலிகள்'' என்று முத்து கூற, ''வாழ்க! வாழ்க!'' என்றார் சரவணன். வேறு வழியின்றி பாவம் பந்துலுவும் சேர்ந்துகொண்டார். இவ்வளவு அமர்க்களத்திலும் சேகர் தனது கைபேசியில் இணைந்திருந்த மிகச் சிறிய கேமராவில் யாளிகளின் தாக்குதலைப் படமாக்கிக்கொள்ள மறக்கவில்லை. உதவி ஹெலிகாப்டர் வந்து நால்வரையும் அழைத்துச் சென்றது. சென்னை திரும்பியதும் கைபேசியில் பிடித்திருந்த புகைப்படங்களை டிஜிட்டலுக்கு மாற்றி, பத்திரிகைகளுக்கு 'டைனோசரின் அண்ணன்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினான். பலத்த வரவேற்புடன் அது நாளேடுகளில் வெளியானது.

ஆராய்ச்சியாளர்கள் சேகரையும் முத்து, சரவணன், பந்துலுவையும் பேட்டி கண்டனர். அந்தத் தீவுக்கே நேரில் ஒரு அணியாகச் சென்று ஆராய்ச்சி செய்ய எல்லா ஏற்பாடுகளும் செய்தனர். இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த அதிசய ராட்சஸ விலங்கினமான யாளி, உயிரோடு ஒரு தீவில் வாழ்ந்துவரும் அதிசயத்தை உலகத்துக்கு அறிவிக்கப் போகிறோம் என்ற பெருமிதத்தில் இருந்தான் சேகர்.

கிளம்புவதற்கு முந்திய வாரத்தில் ஒருநாள், சரவணன் சேகரைத் தொலைபேசியில் அழைத்தார். ''சேகர், ஒரு அதிர்ச்சியான செய்தி! டிசம்பர் மாதம் ஏற்பட்ட நிலநடுக்கம், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமி பேரழிவின் விளைவாக இந்தோனேஷியக் கடல் பரப்பில் இருந்த தீவுகளில் இருபத்து நான்கு தீவுகள் மறைந்துவிட்டனவாம். அதில் யாளித்தீவும் ஒன்றாம். எந்த ஒரு உயிரினமோ தாவரமோ அந்தப் பகுதியில் பிழைத்திருக்க வாய்ப்பே இல்லையாம். மனத்தைத் தேற்றிக்கொள்'' என்றார். ●


பெரிய யாளி ஒன்று முரட்டுத்தனமாக மோதி இடித்ததில், கண்ணாடி பொத்துக்கொண்டு...

கௌதம்ராம்



இந்திய வரைபடத்தில் தலைப் பகுதியில் உள்ள மாநிலம் ஜம்மு-காஷ்மீர். இமாலய மலைப் பகுதியில் அமைந்துள்ள இந்த மாநிலத்துக்கு இந்தியாவின் சுவிட்சர்லாந்து என்று சிறப்புப் பெயர் உண்டு.

உலகின் பல நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் அளவுக்கு இயற்கை எழில் கொஞ்சும் மாநிலம். ஆங்கிலேயரது ஆட்சிக் குடையின் கீழ் இந்தியாவின் பல்வேறு பகுதிகளையும் ஐநூறுக்கும் அதிகமான மன்னர்கள் ஆண்டு



புது வரவு

இந்திய நாடு நம் வீடு-1

இந்தியாவில் ஒரு சுவிட்சர்லாந்து!

வந்தார்கள். 1947 ஆகஸ்ட்... இந்திய நாடு, ஆங்கிலேய ஆட்சியின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளத் தயாராகிக்கொண்டிருந்த சமயம். இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் இருந்த மாநிலங்கள் தனியாகப் பிரிந்து மேற்கு பாகிஸ்தானும், கிழக்கு வங்காளத்திலிருந்து கிழக்கு பாகிஸ்தானும் உருவாயின. இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன், பல்வேறு பகுதிகளையும் ஆண்ட மன்னர்கள், இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ தங்கள் விருப்பம் போல இணைந்து கொள்ளலாம் என்றது பிரிட்டிஷ் அரசாங்கம். அப்போது ஜம்மு - காஷ்மீரை ஆண்ட மன்னர் ஹரிசிங், இரண்டு நாடுகளுடனும்



சேர விரும்பவில்லை, ஜம்மு - காஷ்மீர் தனி நாடாகவே இயங்கும் என்றார்.

ஆனால், பாகிஸ்தானுக்கு, காஷ்மீர் மீது ஒரு கண் இருந்தது. தக்க சமயம் பார்த்து காஷ்மீர் மீது படையெடுத்து தன்னுடன் இணைத்துக் கொள்ள திட்டம் தீட்டியது. காஷ்மீர் மீது நேரடியாகப் போர் அறிவிக்காமல், ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த மலைவாழ்



அனுப்பி வைத்தது. இந்திய ராணுவம், குறிப்பாக விமானப்படை, ஆதிவாசிகள் படையை விரட்டத் தொடங்கியது.

இதற்கிடையில், பாகிஸ்தானின் இந்த அத்துமீறல் குறித்து இந்தியப் பிரதமர் நேரு, ஐ.நா. சபையில் புகார் செய்தார். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில், இரு நாட்டுப் படைகளும் சண்டையை நிறுத்த வேண்டுமென



மக்களைத் தூண்டி, ஆயுத உதவி செய்து, காஷ்மீருக்குள் அனுப்பியது. மலைவாழ் மக்கள் படை காஷ்மீரின் சில பகுதிகளைக் கைப்பற்றிய சூழ்நிலையில், ஹரிசிங் இந்தியாவின் உதவியை நாடினார். இந்தியாவுடன் காஷ்மீரை இணைக்க சம்மதித்தால் இதில் தலையிட முடியும் என்பதை இந்தியா சுட்டிக் காட்டியது. ஹரிசிங் சம்மதம் தெரிவித்து, ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இந்தியா, பாகிஸ்தான் ஆதரவு மலைவாசிகள் படையால் கைப்பற்றப்பட்ட காஷ்மீரின் பகுதிகளை மீட்க, தன் இராணுவத்தை

அறிவித்தது. இந்திய இராணுவம், மலைவாசிகள் படையை முற்றிலுமாக விரட்டி அடிப்பதற்கு முன்பாகவே, இந்த ஐ.நா. அறிவிப்பு வந்ததால், தம் பணியை முழுமையாக நிறைவேற்ற முடியாமல் போனது. அதன் காரணமாக, இன்றுவரை ஜம்மு-காஷ்மீரின் சில பகுதிகள் இந்திய வரைபடத்தில் இடம் பெற்றிருந்தாலும் நிஜத்தில் பாகிஸ்தான் வசமே உள்ளன. அந்தப் பகுதி, பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் எனப்படுகிறது.

கடுங்குளிர் பகுதியான லடாக், பன்

ளத்தாக்குப் பகுதியான காஷ்மீர் மற்றும் ஜம்மு ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்ட நிலப்பகுதி ஜம்மு - காஷ்மீர் எனப்படுகிறது. காஷ்மீரில் தீவிரவாதச் செயல்களுக்கு பலியான அப்பாவி மக்களின் எண்ணிக்கை பல்லாயிரமாகும். இவை அனைத்தையும் மீறி, ஜம்மு-காஷ்மீரில் தேர்தல் நடத்தப்பட்டு, ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, ஆட்சி செய்கிறது.

ஜம்மு, இந்துக்கள் மிகுதியாகவும் காஷ்மீர், முஸ்லீம்கள் அதிகமாகவும்



வாழும் பகுதி. இந்த மாநிலத்துக்கு இரண்டு தலைநகரங்கள். மே முதல் அக்டோபர் வரையிலான கோடை காலத்தில் காஷ்மீர் பகுதியில் உள்ள ஸ்ரீநகர், தலைநகராக இருக்கும். நவம்பர் முதல் ஏப்ரல் வரையிலான குளிர் காலத்தில் ஜம்மு, மாநிலத்தின் தலைநகராக இருக்கும். ஜம்மு-காஷ்மீரில் இருபத்திரண்டு மாவட்டங்கள் இருக்கின்றன.

ஜம்மு பகுதியில், ஹோலி, நவராத்திரி, ஸ்ரீராம நவமி, சிவராத்திரி, ரக்ஷா பந்தன், தீபாவளி, குளிர்காலத்தின் முடிவினைக் குறிக்கும் 'லோஹரி' திருவிழா கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றன. காஷ்மீரில் முஸ்லீம்கள் மொகரம், பக்ரீத் மற்றும் 'உர்ஸ்' என்ற பண்டிகைகளைக் கொண்டாடும்போது, இந்துக்களும் பங்கேற்பார்கள்.

காஷ்மீரில் தயாரிக்கப்பட்ட சால்வைகள், கைவேலைத் திறன் கொண்டு நுட்பமாக டிசைன் செய்யப்பட்ட தரை விரிப்புகள் உலகப் புகழ் வாய்ந்தவை. துணிகளில் செய்யப்படும் பிரத்யேகமான எம்பிராய்டரிக்கு 'கசிதா' என்று பெயர். தாமிரம் மற்றும் வெள்ளியிலான கலைநயம் மிகுந்த கலைப் பொருட்களுக்கும் மிகுந்த கிராக்கி உண்டு. இங்குள்ள 'தால் ஏரி' படகு வீடுகளில் சுற்றுலாப் பயணிகள் தங்கி, உற்சாகமாக பொழுது போக்குவார்கள். காஷ்மீர் உணவு வகைகளில் சுவையோடு மூக்கைத் துளைக்கும் வாசனையும் இருக்கும்.



ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் மக்கள் காஷ்மீரி, உருது, டோக்ரி, பாஹரி, பால்டி, லடாக்கி, பஞ்சாபி, கோஜ்ரி, தாத்ரி ஆகிய மொழிகளைப் பேசுகிறார்கள். காஷ்மீரத்து ஆண்கள் ஆடும் நடனத்துக்கு 'தம்மல்' என்றும், பெண்களின் நடனத்துக்கு 'ரௌஃப்' என்றும் பெயர்.

இந்த வட்டப் பெட்டிக்குள்
ஒரு ஜோக் எழுதுங்கள்.
'குபீர்' சிரிப்பை வரவைக்கும்
ஒவ்வொரு ஜோக்குக்கும்

பரிசு ரூ.25/-

பெயர்...

வகுப்பு, பள்ளி...

....

வீட்டு முகவரி...

....

இந்த சதுரப் பெட்டிக்குள்
ஓர் அறிவியல் துணுக்கை எழுதி
அனுப்புங்கள். தேர்வாகும்
ஒவ்வொரு துணுக்குக்கும்

பரிசு ரூ.25/-

பெயர்...

வகுப்பு, பள்ளி...

....

வீட்டு முகவரி...

....

இந்த அறுகோணப்
பெட்டிக்குள் பொன்மொழிகள்
அல்லது விடுகதைகளை எழுதி
அனுப்புங்கள். பொன்மொழியாக
இருந்தால் யார் சொன்னது என்பதை
குறிப்பிடுங்கள்!

பரிசு ரூ.25/-

பெயர்...

வகுப்பு, பள்ளி...


....

வீட்டு முகவரி...


....

போட்டி

பரிசுப் பெட்டிகள்!







- 'பரிசுப் பெட்டிகள்' என்ற இந்தப் புதுமையான போட்டிக்கு உங்களை வரவேற்கிறோம். இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் மட்டுமே கலந்துகொள்ள வேண்டும்.
- கொடுக்கப்பட்டுள்ள குறிப்பு களின்படி பெட்டிகளைப் பூர்த்தி செய்து கத்தரித்து அனுப்ப வேண்டும்.
- ஒவ்வொரு பெட்டியையும் பூர்த்தி செய்தபின் உங்கள் பெயர், படிக்கும் வகுப்பு, பள்ளி மற்றும் வீட்டு முகவரியை மறக்காமல் குறிப்பிடுங்கள்.
- ஒருவரே மூன்று விதமான பெட்டிகளையும் பூர்த்தி செய்து அனுப்பலாம். அல்லது ஒன்று, இரண்டு பெட்டிகளை மட்டும் அனுப்பலாம். அது உங்கள் விருப்பம். ஆனால், நகல் எடுத்து அனுப்பக் கூடாது. இங் குள்ள பெட்டிகளை மட்டுமே பயன்படுத்தவும்.
- பூர்த்தி செய்த பெட்டிகளை ஐந்து ரூபாய் அஞ்சல் உறை யில் வைத்து, அனுப்ப வேண் டும். அஞ்சல் அட்டையில் பரிசுப் பெட்டியை ஒட்டக் கூடாது.
- முடிவு தேதி: 15.02.2008. ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர் - கோகுலம்
(பரிசுப் பெட்டி)
47-NP, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


301


302


303


304


305


306


307


308


309


310


311


312


313


314


315


316


317


318


319


320


321


322


323


324


325

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


326

327

328

329

330

331

332

333

334

335

336

337

338

339

340

341

342

343

344

345

346

347

348

349

350

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 · Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 · Registered as a Newspaper in Srilanka

